தென்மொழி

சுவடி: 15; ஓலை 3-4; விலை: 1 உருபா.

பெரியார் நூற்றாண்டுச் சிறப்பிதழ்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

28.10.78
28102

நமக்கு வந்த மடல்கள்.

0: 600: அன்பிற் சிறந்த அருமை நண்பரீர்! வாழ்க! வணக்கம். உலகத் தமிழ்க் கழக நான்காவது பொது மாநாட்டுத் தீர்மானங் களில் தமிழ் உரிமைக்கு எதிர்ப்பான தீர்மானங்களா? உ. த. க மாநாடு சென்னையில் (2-7-78)-இல் நடந்தது. தீர்மானங்கள் பல ஒருவரால் திடுமெனப் படிக்கப்பட்டன. இவை உறுப்பினர் பொது அவையில் நிறைவேற்றப்பட்டவை யல்ல. அந்த அவை கூடவுமில்லை. தீர்மானங்கள் முன்மொழிவு, வழிமொழிவுகள் செய்யப்படவுமில்லை. அவற்றின் மீது கருத்து எடுக்கவுமில்லை. மாநாடு ஒரு முற்பகல் மட்டுமே நடந்தது. பேச்சாளர்கள் யாவரும் பேசி முடித்தபின் மாநாடு முடியும் தறுவாயில் ஒருவர் அவற்றைப் படித்தார். அவ்வளவே! இனி, 3-ஆவது தீர்மானம் 'ஆங்கிலப் பட்டம் பெற்ற தமிழ்ப் புலவரையே தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்கட் கெல்லாம் துணைவேந்தராக அமர்த்துமாறு அரசை வேண்டிக் கொள்கிறது'.

காமராசர், கருணாநிதி, எம். சி. ஆர் போன்றோர் முதலமைச்சர் களாக இருந்து திறமையாக ஆட்சி நடத்த வில்லையா? தமிழ் மட்டும் கற்ற புலவர்கட்குத் துணைவேந்தர் ஆவதற்குத் தகுதி இராதா? ஆங்கிலப் பட்டம் பெற்றவருக்குத்தான் திறமை உள்ளதோ? பிரிட்டன் பிரான்சு, செர்மனி, உருசியா, சீனா, சப்பான் முதலிய நாட்டவர் எவரேனும் இவ்வாறு "ஆங்கிலப் பட்டம் பெற்றவரையே" என்று தீர்மானம் போட எண்ணவுஞ் செய்வாரா? ஆம்! அவர்கள் தன்னம் பிக்கையும் தன்னுரிமையும் மானமுமுடையவர்கள். நம்மவரோ 200 ஆண்டுகளாக அடிமையுணர்வில் ஊறித் தன்னம்பிக்கை, தன்மானம், தன்னாட்சி அற்றவர் தாமே! அதுவும், நந்தமிழ்க் கழகமா இப்படித் தமிழ்ப் புலவர்களை இகழ்ந்தொதுக்குவது?, இனி, தீர்மானம் 4-இல் "தொடக்கம் முதல் இறுதிவரை தமிழ்; ஆங்கிலம் என்னும் இரு மொழியில் தேர்ந்தெடுப்பு மாணவர்க்கு விட்டு விடுமாறும் ஆங்கில வாயிற் கல்வியை இலவசம் ஆக்குமாறும், ஆங்கில வாயில் வகுப்புப் புதுப்பிப்புகளை வேண்டிய அளவு தோற்றுவிக்கு மாறும் அரசை வேண்டிக் கொள்கின்றது."

இதனால், தொடக்கம் முதல் என்பது பாலர் வகுப்பிலிருந்து இறுதிவரை என்பது பட்ட மேற்படிப்பு வரையில், ஒரு தமிழ்ப் பச்சிளங் குழந்தை—பாலன், இளைஞன் தன் தாய் மொழியாம் தமிழை ஒதுக்கி விட்டு ஆங்கிலமே படிக்கலாம் என்பது தெளிவாகின்றது. மேலும் மேலும் தமிழ்க் குழந்தைகள் அனைவருமே தாய் மொழியை விட்டு ஆங்கிலமே பயில அரசு வாய்ப்பளிக்க வேண்டு மென்பது தீர் மானத்தின் ஆர்வமாம் என்பது தெளிவாம்; விளக்கம் வேண்டாம். ஐயோ! நம் தமிழ் மொழியை ஒழிக்கக் குழந்தைகட்கு உரிமைதர வேண்டுமாம்; அவற்றிற்குத் தாய்மொழி யாதென்று தெரியாதே!

'அடுத்து '17-ஆவது தீர்மானம், இந்தியக் கல்வி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், பொது உறவு மொழியாகவும், விடுதலை மொழி யாகவும் ஒற்றுமை மொழியாகவும் உலகுள்ளளவும் உதவுதற்குத் தலைசிறந்த ஆங்கில மொழி இருப்பதால் அதையே நிலையான ஒரே இந்திய ஆட்சி மொழியாக்க மொரார்சி தேசாயை வேண்டுகின்றது.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

பெரியார் பிறந்தார்; பிறந்தது உள்ளொளி!

பெரியார் நம்மிடைப் பிறந்திரா விட்டால்
நரியார் நாயகம் இங்கே நடந்திடும்!
திரியாத் தமிழ்க்கும் திகழ்நா டதற்கும்
உரியார் நாமெனும் உண்மை,பொய்த் திருக்கும்!
ஆரியர்க் கின்னும் அடியராய்க் கிடப்போம்!
பூரியர் புராணப் புளுகுக் குப்பையுள்—
சாதிச் சகதியுள்—சமயச் சேற்றினுள்—
புதையுண் டிருப்போர்! புழுக்களாய் இருப்போம்!
சிதைவுற் றிவ்வினம் சிதறுண் டிருக்கும்!
பெரியார் பிறந்தார்! பிறந்தது உள்ளொளி!
அரியார் நாமெனும் ஆக்கமும் சிறந்ததே!

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை ; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை : 3-4.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மடங்கல்-கன்னி தி பி. ௨00க-
செப்தம்பர்-அக்தோபர்-1978.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. க.ம

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

அலுவலகப் பொறுப்பாளர். அழ. இளமுருகன். அறி.இ

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன,]

பெரியார் நூற்றுண்டு நினைவுகள்.

பெரியார் பிறந்து ஒரு நூறுண்டு ஆகிறது. தமிழகமும் மற்றும் தமிழர்கள் வாழும் உலக நாடுகளில் உள்ள பகுதிகளும் அவர் நூற்றுண்டு விழாவைப் பெருமையுடன் கொண்டாடுகின்றன. தமிழர் உள்ளங்களிலெல்லாம் அவரைப் பற்றிய ஒரு நன்றியுணர்வு நிறைந்திருக்கின்றது. மிகப்பெரிய ஒரு நாகரிக இனமான தமிழ் இனத்தைக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வந்த ஆரியத்தின் நச்சுவேரை அகழ்ந்து அகற்றுவதில், அவர் போராடிய முயற்சிகள் இவ்வுலகம் உள்ளளவும், இதில் வாழும் தமிழினத்தவர்களால், நன்றியுடனும் பெருமையுடனும் நினைக்கப்படும்.

அவர் செய்த முயற்சிகள், போராடிய போராட்டங்கள், பேசிய பேச்சுகள், நடந்த நடைகள் ஆகிய அனைத்தும் இத்தமிழினத்திற்கு முழுவதுமாகப் பயன்பட்டன. அரசியல் நிலைகளில் தமிழினத்திற்கு அவர் பெற்றுத்தந்த உரிமை உணர்வுகளும், குமுகாய நிலையில் அவர் மீட்டுக் கொடுத்த தன்மான உரிமைகளும், ஒடிந்து போய் வீழ்ந்திருந்த தமிழினத்தின் முதுகெலும்பை நிமிர்த்து, எல்லா இனத்தைப் போலவே நடையிட வைத்தன. அவர் வெறும் ஒரு கட்சியின் தலைவராக இருந்து பணி செய்யவில்லை. அவர் உலகெங்கணும் பரந்துபட்டு வாழ்ந்த ஒரு பேரினத்தின்—பெருமைமிக்க ஒரு பண்டையினத்தின் தலைவராகவும், ஒரு காலத்தின் தலைவராகவும் இருந்து மக்களுக்கு வழி காட்டினர்; அவர்களை வழி நடக்கச் செய்தார்.

முற்றும் மூட நம்பிக்கைகளாலேயே நிரப்பப் பெற்றிருந்த கடந்த மூவாயிரமாண்டுக் காலத் தமிழினத்தின் அறிவுக் கண்களைத் திறந்து விட்ட பெருமை பெரியார் அவர்களையே சாரும். திருவள்ளுவருக்குப் பின், மக்கள் இனத்தை அளாவி எண்ணிய ஒரே தலைவர் பெரியார்—தாம். காந்தியடிகளார் கூட ஓர் இனத்தையும், ஒரு மொழியையும், சில மூடக்கொள்கைகளையும் தம் பொதுநலத் தொண்டின் எல்லையாக வகுத்துக் கொண்டார். ஆனல் பெரியார் தம் பேச்சிலும் எழுத்திலும் தமிழர்கள், பகுத்தறிவு என்று நொடிக்கு நூறுயிர முறைகள் கூறினுலும், அவர்தாம் எடுத்துக் கொண்ட கொள்கைகளில் மக்கள் அனைவரையுமே உள்ளடக்கினுர். தனிப்பட்ட ஓரினத்திற்காக அவர் வாழ்ந்தது போல் தோன்றினுலும், ஓர் எல்லைக்குட்பட்ட மக்களுக் காகவோ, அல்லது ஓர் இன மக்களை மட்டும் எதிர்த்தோ, அவர் போராட்டம் நிகழ்த்தியதாகக் கொண்டுவிட முடியாது. அவர் போராட்டமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் நடைபெற்றதாகக் கூறமுடியாது. மக்கள் அனைவர்க்குமாக, மாந்த இனம் முழுமைக்கு மாக அவர் போரிட்டார். ஓர் இனத்தைத் தாழ்த்தி வீழ்த்துகின்ற முயற்சியில் ஈடுபடும் எந்த ஒரு மாற்றினத்தின் மேலும் அவர் அடித்த அடி விழுந்தது; இனி, எப்பொழுதும் விழுந்து கொண்டுதான் இருக்கும்.

அழித்துக் கொள்ளப்படாத தந்நலம் மேவிய ஓர் இனத்தின் மூடக் கொள்கைகளாலேயே மற்ற இன மக்களை உள்ளிருந்து அரித்து வருகின்ற ஓர் இன மக்களின் மேல் அவர் நடத்திய போராட்ட முயற்சிகள் முழுவதுமாக வெற்றி பெருமல் போயிருக்கலாம். ஆனுல் அவர் போலும் காலத் தலைவர்களின் கருத்துகள்-அவற்றின் வெற்றி தோல்விகள்-வெட்ட வெளிச்சமாக-வெளிப் படையாகக் கணித்து விடக்கூடியன அல்ல. வெட்டி வைத்த ஏரிகள் போலவும், கட்டி

வைத்த மண்டபங்கள் போலவும், நட்டு வைத்த நினைவுத்தூண்கள் போலவும் மக்கள் கண்களுக்குப் பருப்பொருள்களாக உருத் தருபவை அல்ல அவரின் தொண்டு முயற்சிகள். மாந்த உணர்வோடு உணர்வாகக் கலந்து, அவர்களையே உருமாற்றும் திறன் வாய்ந்தவை அவை. கப்பலின் பாய்மரங்களைத் தாக்கி அவற்றின் திசைகளைத் திருப்புகின்ற வலிந்த புயற்காற்றைப் போல்—ஆழ வேருன்றியுள்ள நச்சு மரங்களை அகழ்ந்தெடுத்து அப்புறம் வீசும் அடர்த்த சூறுவளியைப் போல், மக்களிடையே நடத்தும் அவர் போலும் புரட்சிக்காரர்களின் போராட்டங்கள் எழுச்சி பெற்றுத் திகழும். அவற்றை அளவிட முடியாது. அவற்றின் வெற்றி தோல்விகளை எடையிட முடியாது. காலத்தால் ஏற்படும் படிப்படியான மாறுதல்களும் அம்மாறுதல்களால் உருவாகும் மக்களின் மறுமலர்ச்சிகளுமே அவற்றின் வெற்றிகள், அவற்றை, ஒரு தனி மாந்தனை வைத்துக் கணிக்க முடியாது. ஒட்டு மொத்தமான ஓரின மக்கள் கூட்டத்தை வைத்தோ, அதன் முன்பின் வரலாறுகளை வைத்தோதான் அவற்றை எடையிட முடியும்.

புரட்சி என்பது ஒரு கதையைப் போன்றதன்று. அஃது ஒரு வரலாற்றைப் போன்றது. அதற்குத் தொடக்கம் ஏது? முடிவுதான் ஏது? உலக வரலாற்றுப் பொத்தகத்தின் ஒரு சில கால ஏடுகளாகத் திகழும் பெரியார் போலும் வரலாற்றுக்காரர்களை, அப்பக்கங்களின் எழுத்துகளாகவும் புள்ளிகளாகவும் உள்ள மற்ற தனி மாந்தர்கள் எடைபோட்டுவிட முடியாது. தொடர்ந்து எழுதப் பெறும் உலகத்தின் கதையில் பெரியாரைப் போன்றவர்கள் உறுப்பினர்கள். மற்ற பொது மாந்தர்களோ அக்கதைக் காட்சிகளுக்கு இடையில், தோன்றுமல் வந்து போகும் சிறுசிறு பறவைகள், பட்டுப் பூச்சிகள், வெட்டுக்கிளிகள், ஈக்கள், எறும்புகளைப் போன்றவர்கள். காட்சி மாற்றங்களையும், உறுப்பினர்களின் அறிவு மோதல்களையும் அச் சிற்றுயிரினங்களால் அறிந்து எடையிட முடியாது.

சாக்ரடீசு, புத்தர், திருவள்ளுவர், ஏசு, நபி, காந்தி போலும் காலத்தின் எல்லையாக அமர்ந்து விட்டவர் பெரியார். ஆனால் அவர்கள் செய்த அருஞ்செயல்களை விட ஒருபடி மேலாகவே செய்தார் பெரியார். அவர்கள் அனைவரும் நன்மைகளையே செய்தார்கள்; பரப்பினார்கள்; பேசினார்கள்! ஆனால் பெரியார் தீமைகளையே எதிர்த்துப் போரிட்டார். விதைகளைத் தூவுகிறவர்களைவிட, மண்டிக் கிடக்கும் களைகளை அகற்றுபவனுக்கும், முட்களை வெட்டியெறிபவனுக்கும், கற்களைப் பொறுக்கி அப்புறப் படுத்துபவனுக்குந் தான் வேலைகள் மிகுதி. முயற்சிகள் மிகுதி. உடலுழைப்பு ஏராளம்.

கிரேக்க அறிஞன் சாக்ரடீசு பேசிய பேச்சுகளை விட பெரியார் பேச்சுகள் அளவிலும், உணர்விலும் பல மடங்கு மிகுந்திருக்கும்.

சாக்ரடீசு தான் ஆழமாகச் சிந்தித்துக் கொஞ்சம் பேசிப், பிறரை தன்னினும் அதிகமாகப் பேச வைத்தான். பெரியார், தாம் அகலமாகச் சிந்தித்து அதிகம் பேசிப் பிறரைக் கொஞ்சமேனும் சிந்திக்க வைத்தார். சாக்ரடீசு பேசியதை விட, நடந்ததைவிட பெரியார் அதிகமாகப் பேசினார்; மக்களுக்காக இரவு பகல்; பனிகுளிர், வெயில் மழை, மேடு பள்ளம், காடு நாடு, சிற்றூர் பேரூர்-என்று பாராமல் நேரிடையாக நடந்து மக்களைப் போய்க் கண்டார்; அவர்களுக்காகக் கவலை கொண்டார்; அவர்களுக்காக மணிக்கணக்காகப் பேசினார்; அவர்களின் நரம்புகளிலும் குருதி யோட்டங்களிலும் தன்மான உணர்வையும் தன்னம்பிக்கையும் ஊட்டி உணர்வேற்றினார். எனவே சாக்ரடீசை விடப் பெரியார் பல படிகள் உயர்ந்தவர்.

புத்தர் அரசர். அவர் நினைந்திருந்தால் அவரால் முடிந்த அளவு அவர் நாட்டிலிருந்த மக்களையாகிலும் இன்பமாக வாழும்படி அறிவுரைகள் சொல்லியிருக்கலாம்; ஆக்கங்களைப் பகிர்ந்திருக்கலாம். 'ஆசைகளை விட்டு விடு' என்பது அவ்வளவு சிறந்த அறிவுரையாகாது; அதுவன்று துன்ப நீக்கத்திற்கு மருந்து. 'ஆசையை அறு; துன்பம் நீங்கிப் போகும்' என்று எவரும் சொல்லலாம். இதனால் யாருக்கும் துன்பம் நீங்கி விடாது. இவ்வுலகில் பிறந்து விட்டோம். ஆசைக்காகவே பிறந்தோம் என்றே வைத்துக் கொண்டாலும் 'அதை எப்படி நிறைவேற்றிக் கொள்வது' என்பதிலேயே உயிர்களெல்லாம், மக்களெல்லாம் போராடுகின்றார்கள். தனிப்பட்ட ஆசை என்பது இருக்கட்டும். அவரவர் வாழ்க்கைக்குரிய பொதுவான இயற்கையான, நேர்மையான ஆசை என்பதை எவரும் நிறைவேற்றிக் கொள்ளவே செய்வர். அத்தகைய எல்லாருக்கும் உகந்த-வாழ்வுக்குரிய இயல்பான ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்வது-அதற்குள்ள தடைகளை எப்படித் தகர்த் தெறிவது என்று வழி காட்டுவது மிகக்கடினம், மற்றபடி 'ஆசையை அடக்கு' என்பது சிக்கலுக்குத் தீர்வு ஆகாது; சிக்கலே இல்லாமல் செய்வது அது. ஆனால் உலகில் சிக்கல்கள் இருந்து கொண்டுதாமே இருக்கின்றன. பசிக்கு உணவு தேவையென்றால், பசியை அடக்கிக்கொள் என்பதன்று தீர்வு. ஒருவன் குமட்டும்படி வயிறு புடைக்கத் தின்கிறான்; மற்றவன் ஒரு வாய்ச் சோற்றுக்கு அங்காந்து கிடக்கிறான் என்றால், அவனைப் பார்த்துப் 'பசியை அடக்கிக் கொள்!' 'ஆசையை அடக்கிக்கொள்' என்பதன்று தீர்வு. அவனின் ஏமாற்றையும், இவனின் ஏமாளித்தனத்தையும் வெளிப்படையாக எடுத்து சொல்லி, இருக்கின்ற உணவைப் பகிர்வு செய்வதற்கான முயற்சியை உண்டாக்குவதே குமுகாயப் புரட்சியாளர்கள் செய்கின்ற வேலையாகும். அவர்களைப் போன்றவர்கள், புத்தரைப் போன்றவர்களைவிட, வினை மிகுந்தவர்கள்; சிறந்த

பயனுள்ளவர்கள்; மக்களுக்கு நலஞ்செய்பவர்கள்; செயற்கரிய செய்பவர்கள்!

இனி, திருவள்ளுவரைப் போலும் மெய்யறிஞர்கள் மிகப்பெரும் பேரறிவாளர்களாக இருந்து நூல்கள் படைக்கலாம். ஆனால் மக்கள் நிலையில் அவற்றைக் கொண்டு செலுத்தும் வல்லமையுள்ளவர்களாலேயே அத்தகைய அறிவு உலகுக்குப் பயன்படமுடியும். அதற்குப் பெரியாரைப் போலும் புரட்சியாளர்களே தேவை. இனி, அறிவைச் செயலுக்குக் கொண்டு வரும் முயற்சியில், ஏசுவின் முயற்சி புத்தரை விட, திருவள்ளுவரைவிட ஒருபடி மேலானது. தமக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு, அதற்கெனத் தொண்டர் குழாத்தை அமைத்துக் கொண்டு, சில இடங்களில் நேரிடையான முயற்சிகளில் ஈடுபட்டவர் அவர். மக்களை விட்டு விலகி மக்கள் தொண்டு செய்ய முடியாது என்னும் கொள்கை ஏசுவினாலேயே முதன்முதல் கடைப்பிடிக்கப் பெற்றது. ஏசு ஒரு தேவ இறக்கம் (அவதாரம்) என்பதைவிட நல்ல மக்கள் தொண்டர் என்பதையே அறிவுலகம் ஏற்றுக்கொள்ளும். இனி, முகமது நபியோ மக்களின் பொருட்டுப் பெரிய போராட்டங்களையும் போர்களையுமே நிகழ்த்தியவர் ஆவார். ஏசுக்கிறித்துவைவிட இவர் மக்களின் பொருட்டு மிகுதியாகப் போராட்டம் நிகழ்த்தி வெற்றி பெற்றார். இனி, காந்தியடிகளின் தொண்டில் பெரும் பகுதியும் மக்கள் நலக் குறிக்கோள் இருந்தாலும், தனி மேலாளுமை செய்யும் ஓர் இனத்தின் தன்னலவுணர்வும் அதன் மூடக்கொள்கைகளுக்குத் துணைபோகும் வருணச்சிரமக் கீழ்மைத் தாக்குதல்களும் அவர் முயற்சிகளில் வேரோடிக் கிடந்தன. இவை அவர் தொண்டின் தூய்மையைக் கெடுத்தன. எனவே, இனநல விரும்பிகளும், வருணச்சிரமம் விரும்பிய முதலாளிகளும், செல்வர்களும் இறுதியில் தன்னுட்டுரிமை பெற்ற அரசும் அவர்க்கும் அவர் முயற்சிகளுக்கும் பெரிதும் துணையாக வந்து அமைந்தார்கள். தொடக்கத்தில் துன்பமாக இருந்த அவர் குடிமை முயற்சிகள் இறுதியில் அவர் கொள்கைக்குப் படிகளாய் அமைந்தன. மேலும் இவ்வுலகில் மத முயற்சிகளுக்கும், வழிவழியாக வரும் மூடக் கொள்கைகளைக் கட்டிக்காக்கும் அறியாமை முயற்சிகளுக்கும் ஒருபுறம் இல்லையானாலும் மறுபுறத்தில் வரவேற்புகள் இருந்தே தீரும். ஆனால் பெரியார் போன்றவர்களின் சீரிய, துணிந்த முயற்சிகளுக்கு எல்லாப் புறங்களிலும் எதிர்ப்புகளே சூழும் என்பது கவனிக்கத் தக்கது.

பெரியாருக்கு எப்படி வரலாறு உண்டோ, அப்படியே அவர் காலத்துக்கும் ஒரு வரலாறு உண்டு. அவ்வாறு காலத்தின் வரலாறாக,

வரலாற்றின் காலமாக அமைந்துபோன அவரின் கொள்கைகள் என்பவை, அவர் பருவுடல் வாழ்க்கையோடு முற்று பெற்றவை ஆகா. அவருடைய உடல்தான் அக்கொள்கைகளின் வித்து. அவ்வித்து அழிந்து மரமாகிவிட்ட நிலையே அவர் பருவுடல் மறைந்துபோன நிலை. இனி, அம்மரம் நன்றாக வளர்ந்து, செழித்து, முற்றி முதிர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து மேலும் ஆயிரக்கணக்கான வித்துகளைத் தோற்றுவிப்பதே இயற்கை. அவ்வாறு தோற்றுவிக்கப்பெறும் வித்துகள் யாவும், மேலும் மேலும் பல்லாயிரக் கணக்கான; கோடிக் கணக்கான வித்துகளை இவ்வுலக மெங்கணும் பரப்பிக் கொண்டே யிருக்கும். அவற்றின் விளைவுகளெல்லாம் அந்த மூல வித்தின் விளைவு களாகவே கருதப்பெறும். பெரியார் என்னும் மூல வித்தின் விளைவை, அதனின்று தோன்றிய கோடிக்கணக்கான வித்துகளின் பரப்பை யாரும் ஓரிடத்திலிருந்து கொண்டு, ஒரு காலத்திலிருந்து கொண்டு எடையிட்டு விட முடியாது.

அவர் கொள்கைகளில் பிழைகள் இருக்கலாம்; கருத்துகளில் தவறுகள் இருக்கலாம். (எவருடைய கருத்துகளிலும் கொள்கை களிலும் எவரும் பிழைகள் காணத்தான் செய்குவர். அவை பற்றி நாம் இங்கு எதுவும் கூற விரும்பவில்லை). ஆனால் முயற்சிகளில் அவர் தூய்மையானவர்; மக்களுக்குழைத்த உழைப்புகளில் மாசில் லாதவர்; பொதுத் தொண்டுக்கே இலக்கணமானவர்; வரலாற்றில் அவரைப் போல் மக்களுக்காக உழைத்தவர்கள் மிகக் குறை வானவர்கள்.

தம் வாழ்வுக்கென எதையும் தம் அறிவால் சிந்தித்துக் கொள்ளாத அவர், தம் மகிழ்ச்சிக்கென எதையும் தம் கண்களால் பார்த்துக் கொள்ளாத அவர், தம் தேவைக்கென எதையும் தம் காதுகளால் கேட்டுக் கொள்ளாத அவர், தம் உயிர்ப்புக்கென ஒரு நொடியும் மூச்சுக்காற்றை உள் வாங்காத அவர், தம் இன்பத்துக்கென ஓரிடத்திலும் தம் உடலைக் கிடத்தாத அவர், தமக்கென ஒரு சொல்லும் பேசியிராத அவர், ஒரு முனிவர் போல் வாழ்ந்தார்; துறவி போல் அலைந்தார்: ஆனால் ஒரு தொழும்பனைப்போல் இவ்வுலக மக்களுக்குத் தொண்டு செய்தார்.

துறவியும், முனிவனும் தமக்காகவே தம்தம் உயிர்கள் உய்ய வேண்டும் என்பதற்காகவே, இல்லறத்தைத் தவிர்த்துத் துறவறம் மேற்கொள்கிறார்கள். அவ்வாறு அவர்கள் தங்கள் உயிர்களை மட்டுமே ஈடேற்றுகிறார்கள்; கரை சேர்த்துக் கொள்கிறார்கள். பிற உயிர்களின் மலர்ச்சி பற்றியோ, முன்னேற்றம் பற்றியோ அவர்

களுக்குக் கவலையிருக்க முடியாது. அவ்வாறு கவலையிருக்குமானால், தம் இன மக்களை-தம்மோடு ஒரு காலத்தாலும் இடத்தானும் வாழும் தம்மைச் சூழ்ந்த உயிர்க்கூட்டத்தை-அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன என்னும் கருத்தோடு-விட்டுவிட்டு அவர்கள் மட்டும் புறம் போய்த் துறவு பூண்டு விட மாட்டார்கள்.

ஆனால், பெரியாரைப் போலும் மக்கள் நலம் விரும்புபவர்கள், துறவிகளைப்போல், புறத்தானும் அகத்தானும் எவ்வகைப் பற்றோ பாசமோ இன்றி வாழ்ந்தாலும் மக்களுக்கிடையிலேயே வாழ்கிறார்கள்; மக்களுக்காகவே வாழ்கிறார்கள்; மக்கள் நலன்களே தங்கள் நலமென்று வாழ்கிறார்கள்; ஏன் மக்களாகவே வாழ்கிறார்கள். அவர்கள்தாம் வித்துகள்! வித்துப் போன்றவர்கள்! அந்த வித்துகள், அவற்றின் காலத்தவர்களுக்காகவும் வாழ்ந்தவர்கள்; வாழ்கின்றவர்கள்.

அறிவின் முனைப்பால், அதன் வலிமையால், தம் உயிரை ஒளியேற்றிக் கொண்டு, புலன்களை அவித்த முனிவர்களைப் போல, நலன்களைத் தவிர்த்த துறவிகளைப்போல் மக்கள் இனத்திற்காகவே தாம் வாழ்வெடுத்தது என்னும் நெகிழாத உறுதியுடன், கொள்கையுடன்' அவர்கள் உய்யும் பொருட்டு உயிர் வாழ்ந்தவர் பெரியார். அவர் ஒரு குமுகாய வித்து; நல்வித்து! அவ்வித்து ஒரு காலத்திற்கோ, ஓரிடத்திற்கோ, ஓரின மக்களுக்கோ உரியதன்று. இனி வருகின்ற மக்கள் வழியினர்க்கெல்லாம் உரியது!

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து —குறள் 24

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார் —குறள் 26



"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணக் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் கேட்க!



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: ௪௧

உறக்கத் தெழுந்தழி வுணர்வின சிலவே
உறக்கத் தெழுந்துயிர்ப் பூர்வன சிலவே
கண்படப் புலர்ந்த கனவின சிலவே
எண்படு கனவின் எதிர்வன சிலவே
நினைவுள் உயர்த்தழி நீர்மைய சிலவே
நினைவின் விளைதரு நிகழ்வின சிலவே
நிகழ்ச்சியி லுறுபயன் நேர்வன சிலவே
திகழ்தரு பயன்பிறர் தேர்வன சிலவே
பொலிவுறு வினைகளுட் புகழ்வன சிலவே
மலிபுகழ் வினைதரும் உயிரின சிலவே
உயிரொடும் உடலெனும் உறவின சிலவே
உயிரொடும் உயிரென உறைவன சிலவே
என்றிவை தேறலின் எம்மின்
குன்றும் மறவார் குழன்மோந் தோரே!

பொழிப்புரை:

ஆழ்ந்த உறக்கத்தின் கண்ணே உள்ளத்தின் அடிமனத்துள்ளே எழுந்து, அவ்வுறக்கத்தின் கண்ணாகவே (அங்கேயே) அழிந்துபடுகின்ற உள்ளுணர்வு நிலைகள் சிலவாம் என்க, அவ்வாறு அழிந்தன போக, (உறக்கத்தின் கண்ணாக எழுந்து) அழிந்துபடாமல் நின்று, என்றும் நிலைத்த உயிருணர்வைப் பற்றிக் கொண்டு, அதனொடு ஊர்ந்து திரிகின்ற உணர்வு நிலைகள் சிலவாம் என்க. (அவ்வுணர்வு நிலைகள் சிலவற்றுள்ளும்) அவ்வக்கால், ஆழ்ந்துறங்காது மென்துயிலாகக் கண்மூடும் பொழுதில் புறமனத்துள் தோன்றும் கனா நிலைகள் சிலவாம் என்க; அவ்வாறு தோன்றும் எண்ணப்பெறாத கனவு நிலைகளுள்ளும், எண்ணிக்கைப்படும் கனவுகளுள் நினைவுட் பொருந்துவன சிலவேயாம் என்க; அந்நினைவுட் பொருந்தியவற்றுள்ளும், அங்ஙனே தோன்றி அங்ஙனே அழிந்தொழியும் தன்மையன சிலவாம் என்க. அவ்வாறு அழிந்தொழியாது நின்ற மிகச்சிலவுள்ளும், நனவின்கண் நிகழ்ச்சியாக விளைவு தரத் தக்கன சிலவாம் என்க. விளைந்துநின்ற நிகழ்ச்சிகளுள்ளும் உற்ற பயனுக்கு உதவுவன சிலவேயாம் என்க. அவ்வாறு

பெறும் பயன்களுள்ளும் பிறர்க்கெனப் போய்ச் சேர்கின்றவை மிகச் சிலவாம் என்க; அங்ஙன் அவர்ப் பொருட்டாப் போய்ச்சேரும் பயன் நிலைகளுள், அவர்கள் தம் பொருட்டாய்த் தேர்ந்து பயன்படுத்திக் கொள்ளும் நிலைகளோ மிகச்சிலவே என்க. அவ்வாறு தம் பொருட் டாகவும் பிறர் பொருட்டாகவும் தேர்வுற்று விளங்கித் தோன்றும் வினை நிலைகளுள், காலத்தானும் இடத்தானும் அழிவுறாது நின்று புகழ்ப் பெறுவன மிகமிகச் சிலவேயாம் என்க. அவ்வாறு புகழ் பெறத்தக்க வினைகளைத் தரும் உயிர்களோ இவ்வுலகத்து ஒருசிலவே என்க. அச் சிலவுயிர்களுள்ளும், அவை ஈண்டு உயிர்க்கின்ற வரை உறவு கொள்ளும் உடல்களைப் பெறுவன சில என்க. ஆனால், அவ்வா றின்றி, அவ்வுயிர் இங்குமோ வேறெங்குமோ நின்று இயங்குகையில் அவ்வுயிரொடும் பொருந்திய உயிராக நின்று, ஒன்றி உறையுந்தன்மை வாய்ந்த உயிர்கள் மிகமிகவும் சிலவாம் என்னும் இவ்வரிய உண்மைகளை அவர் தேர்ந்து தெளிந்தார் ஆகலின், எம்மின் குழலை மோந்தவர், அக்குழலுக்குரிய எம்மையும், யாம் வதியும் இக்குன்றையும் என்றும் மறந்துபட மாட்டார் (விரைவில் வருவார்) என்க.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவனிடத்துக் கனவின்கண் தன் கவினலன் கொடுத்த தலைவி, வரைவிடை வைத்து அவன் பிரிந்தவிடத்து, அவன் வரவு குறித்து ஐயுற்ற தோழிக்கு, உயிரின் உணர்வு நிலைகள் உணர்த்தித், தன் னொடும் தொடர்புற்ற அவன், வெறும் உடல் உறவினன் அல்லன்; உயிருறவினன்; எனவே தன் குழலை மோந்த உணர்வு நிலைப்பட்டு நிற்கக், காலமும் இடனும் மறவாது வினைமுடித்து உறுதியின் வருவான் என்றது.

உறக்கம்: புறப்புலன்களும் புறமனமும் ஒடுங்கி, அடிமனம் ஒன்றே உணர்வினதாகக் கொள்கின்ற அழுந்திய துயில். இந்நிலை யைச் 'சுழுத்தி' என்பர் சிவமெய்ந்நூலார். இது கனவு நிலையினும் ஆழ்ந்த ஒடுக்கம் உடையது.

இதன் அடுத்த படிநிலைகளாய பேருறக்கமும் (துரியம்), உயிர்ப் படக்கமும் (துரியதீதம்) மெய்யுணர்வினர்க்கே வாய்ப்பனவாகிய மிகவாழ்ந்த உணர்வுறக்க நிலைகளாகலின் அவற்றை ஈண்டுக் குறித்திலள் என்க.

உறக்கத்து எழுந்து: புறப்புலனும் புறமனமும் ஒடுங்கிய அவ் வாழ்ந்த உறக்கத்து, அறிவொடு தொடர்பறுந்த அவ்வடிமனத்து, தன் விருப்பந் தவிர்த்து, (முன்னைய பிறவிப் படிநிலை வளர்ச்சியான் கிளர்ந்து) உள்நின்ற உயிருணர்வான் எழுந்து தோன்றி.

புற அறிவுத் தொடர்பறுந்த நிலையிற் செயற்படுவது உயிருணர்வொடு பொருந்திய உண்மையறிவாம் என்க. என்னை? 'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவே மிகும்' (குறள் 373) என்றவிடத்துச் சுட்டிய முன்னைய உண்மை அறிவாம் என்க. அவ்வறிவுணர்வான் கிளர்ந்தெழுந்து புறமனத்துக்கே புலப்படாத உள்ளுணர்வு நிலைகள் அவை.

அழி உணர்வின சிலவே: அவ்வாறெழுந்து அவ்வாறே அழிந்து போகின்ற உள்ளுணர்வு நிலைகள் சிலவாம் என்க.

உறக்கத்தெழுந்து உயிர்ப்பு ஊர்வன சிலவே: அவ்வாறு அங்கேயே அழிந்த உணர்வு நிலைகள் கழிய, அடிமனத்தினின்று வெளிப்போந்து புறமனத்தின் கண்ணே உணர்வின் அளவாக ஊர்ந்து நிற்கும் உணர்வு நிலைகள் சிலவாம் என்க.

இவ்வுணர்வு நிலைகளுட் சிலவே கனவு நிலைகளுட் புலப்படும் புறமன உணர்வலைகள்.

கண்படப் புலர்ந்த: ஆழ்ந்துறங்காது கட்புலனும் அதனையடுத்த பிற புறப்புலன்களும் அடங்கிய நிலையினும், புற அறிவு அடங்கா நிலையினும், புறமனத்தே புலர்ந்து தோன்றுகின்ற.

கனவின சிலவே: கனவாகும் உணர்வு நிலைகள் சிலவாம் என்க.

எண்படு கனவின்: எண்ணிக்கையழிந்த கனவு நிலைகளின். எண்ணற்ற கனவுகளுள் எண்ணிக்கைக்குட் படாதன பல உள. அவை போக நம் புற அறிவின் எல்லைக்குள் வந்து புகுந்து நாம் நினைவு நிலையில் வைத்து எண்ணிப்பார்க்க முடிந்த கனவு நிகழ்ச்சிகள்.

எதிர்வன சிலவே: அக்கனவு நிகழ்ச்சிகளுள் நினைவுள் எதிர்ந்து தோன்றுவன சிலவே. எதிர்தல்—எதிர் ஒளித்தல். (Reflection) நினைவு நிகழ்ச்சியைச் 'சாக்கிரம்' என்னும் வடசொல்லாற் குறிப்பர் சிவனிய மெய்ந்நூலார்.

கனவு பலவற்றுள்ளும் சிலவே நினைவுள் தோன்றும்,

நினைவுள் உயிர்த்தழி நீர்மைய சிலவே: அவ்வாறு நினைவுள் தோன்றும் உணர்வுகள் பலவற்றுள்ளும் காலப்போக்கில் அழிந்து போகும் புல்லிய உணர்வுகள் சில. அவ்வாறு போனவை கழிய எஞ்சுவனவும் மிகச்சிலவாம் என்க. (தொடரும்)

பெரியார் முகப்புப் பாடலில் திருத்தம்.

இவ்விதழில் பெரியார் முகப்புப் பாடலின் 8-ஆவது வரியைக் கீழ்வருமாறு திருத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

"புதையுண் டிருப்போம்! புழுக்களாய் மேய்வோம்!"

—அமைச்சர்.

செய்திகள்

1) சென்னை—தி. க. நடத்திய இந்தியெதிர்ப்பு மாநாடு:

கடந்த 15-8-78 அன்று சென்னை—பெரியார் திடலில் திராவிடர் கழகச் சார்பில், பெரியதோர் இந்தியெதிர்ப்பு மாநாடு நடந்தது. மாநாட்டில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், இதழாசிரியர்கள், தமிழ்ப் பேரறிஞர்கள் கலந்து கொண்டு, நடுவணரசின் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர். மாநாட்டிற்கு அரசவயவர் திரு. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினர். தி. க. பொதுச் செயலாளர் திரு. க. வீரமணி வரவேற்புரை யாற்றினர். தவத்திரு. குன்றக்குடியடிகளார், கலைஞர். மு. கருணாநிதி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், பாவலரேறு பெருஞ்சித்திரனர், பி. மாணிக்கம், பர். சந்தோசம், அனந்தநாயகி, வேலூர் நாராயணன், கே. பி. கந்தசாமி, பிரான்சிசுராயன், மாரிசாமி முதலியோர் கருத்துரையாற்றினர். பெருஞ்சித்திரனர் பேசும் பொழுது, “பார்ப்பனர்கள் வடவர்களைத் தூண்டிவிட்டுச் சமசுக்கிருதத்தைத் தேசிய மொழியாக நுழைக்க முடியாத நிலைக்கு, இந்தியைத் திணிக்கச் சொல்லுகிறர்கள். இந்தி சமசுக்கிருதம் இன்றி இயங்காது. எனவே படிப்படியாகச் சமசுக்கிருதத்தைப் புகுத்தி விடலாம் என்பது அவர்கள் கருத்து. இந்தியைக் கடந்த ஐம்பது ஆண்டுக் காலமாக எதிர்த்து வருகிறோம். பெரியாரை விடவும், பாவேந்தர், அண்ணவை விடவும் நாம் இந்தியை எதிர்த்து விடமுடியாது. எனவே, இதுபோல் எத்தனை மாநாடுகள் போட்டாலும், தீர்மானங்கள் நிறைவேற்றினலும் இந்தித் திணிப்பை நாம் தடுத்துவிட முடியாது. வெள்ளைக்காரன் தெரிந்தோ தெரியாமலோ வடநாட்டுப் பார்ப்பான் கைகளில் இந்தியாவைக் கொடுத்து விட்டுப்போய் விட்டான். இப்பொழுது இந்தியாவைப் பொறுத்த அளவில் அரசியல், பொருளியல், குமுகவியல், கல்வி, கலை முதலிய எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும்' இரண்டு வகையான கருத்துகள்தாம் இருக்கின்றன. ஒன்று திரவிடச் சார்பான கருத்து; மற்றொன்று ஆரியச் சார்பான கருத்து. அரசியலால் ஆரியர் வலுப் பெற்றபின் திரவிடச் சார்பான அனைத்துக் கருத்துகளும் மழுக்கப் பெற்றும் மாற்றப் பெற்றும் வருகின்றன. எனவே, இந்தியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. வடநாட்டுப் பார்ப்பான் ஆளுமை இருக்கும் வரை சட்டப்படி இந்தியைத் திணித்தே தீர்வார்கள். அதை எதிர்ப்பதென்பது மக்களை ஏமாற்றுவதே, எனவே இந்தித் திணிப்பை மட்டுமன்று, வடநாட்டாளுமையையும், ஆரியச் சூழ்ச்சியையும் ஒட்டுமொத்தமாகத் தவிர்க்கவே நாம் முயற்சி செய்ய வேண்டும். அப்படியானல் தமிழ்நாடு தனியாகப் பிரிந்தே ஆகவேண்டும். இஃது எங்கள் வலிந்த கொள்கை. உண்மை

யான கொள்கை. வீரமணி பெரியார் இறுதிவரை கொண்ட கொள்கைகளை ஓர் இம்மியும் குறையாமல் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றுக்காகப் பாடுபட வேண்டும். பாடுபடுவார் என்று நம்புகின்றேன். மற்றபடி இது போன்ற மாநாடுகளால் எந்த விளைவும் ஏற்பட்டு விடாது. இதை இந்தத் தமிழகத்திற்கு வெளியே தெரிய விடாதபடி மறைப்பதற்கு இங்குள்ள பார்ப்பனச் செய்தித்தாள்கள் முழுக் கட்டுப் பாட்டோடு இயங்கி வருகின்றன. எனவே ஒரே போராட்டந்தான் நமக்குத் தேவை. அது தனித் தமிழ்நாட்டுப் போராட்டமே! இந்த மாநாட்டில் கலந்து கொண்ட மற்ற தலைவர்களின் கருத்து என்னவோ எனக்குத் தெரியாது; என் கருத்து அது." என்று உரத்த குரலில் உணர்ச்சி வெளிப்பட முழக்க மிட்டார்கள். மாநாட்டிற்கு வந்திருந்த மக்கள் அனைவரும் இக்கருத்தைப் பெருத்த ஆரவாரத்துடன் கைதட்டி வரவேற்றார்கள். இக்கருத்துகளை விடுதலை, முரசொலி உட்பட எந்தச் செய்தித் தாளும் வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்தது. ஏனோ தெரியவில்லை. இறுதியில் வீரமணி பேசும் பொழுது, 'பாவலரேறு கூறியபடி பெரியார் கொள்கையில் ஓர் இம்மியும் நாங்கள் விடாமல் செயற்படுத்துவோம் என்று அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்' என்று குறிப்பிட்டார். முடிவில் இந்தித் திணிப்பைக் கண்டித்து நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. கூட்டம் கலைந்து போகையில் பலர் 'பெருஞ்சித்திரனார் பேசிய பேச்சு ஒன்றுதான் உண்மைப் பேச்சு; மற்றவர்கள் பேசியதெல்லாம் வெறும் பேச்சு' என்று பேசிக் கொண்டு போனது குறிப்பிடத்தக்கது.

2) சென்னை-வில்லிவாக்கம்: தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்:

கடந்த 27-8-78 சென்னை, வில்லிவாக்கத்தில், தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவில் திருவாளர்கள் அரு. கோபாலன், கேசவன், பெரியார் டி. எம். பார்த்தசாரதி (தி. மு. க. வரலாற்றாசிரியர்), பன்மொழிப் புலவர் மதிவாணன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இலங்கைத் தமிழர்களின் நிலைகள் பற்றியும் அவர்கள் போராட்டம் பற்றியும் உலகத்தமிழர் உணர்வெழுச்சி பற்றியும் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள். கூட்டம் முடிந்தபின் அவ்வட்டாரத் தென்மொழி யன்பர்கள் பாவலரேறு அவர்களோடு இரவு 2 மணிவரை கருத்துரையாடி மகிழ்ந்தார்கள்.

3) தாராபுரம்—தமிழ்க்கலை மன்ற இலக்கிய நிகழ்ச்சி:

கடந்த மடங்கல் 18-ஆம் பக்கல் (3-9-78) கோவை மா. வ. தாராபுரம் கலைமன்றத்தார் சார்பில், இரவு 8 மணியளவில், இலக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி வழக்குரைஞர். திரு கார் வேந்தன் அறி. இ., ச. இ. அவர்கள் தலைமையிலும் மன்றத் துணைத்தலைவர் திரு. வ. க. வெங்கிடசாமி முன்னிலையிலும்

தொடங்கியது பல்லடம் தென்மொழி ந. முத்துக்குமரன் அறி.இ; தென்மொழி மறை நித்தலின்பனுர் முதலியோர் உரைக்குப் பின் ஆசிரியர் பெருஞ்சித்திரனுர் 'வாய்த்த நல் அமுது' என்னும் தலைப்பில் சிறப்புரை யாற்றினர். இரவு 2 மணிவரை குளிரையும் ஊதற் காற்றையும் பொருட்படுத்தாமல் மக்கள் இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. தொடக்கத்தில் திரு. வேலரங்கன் அவர்கள் வரவேற்புப்பா பாடினுர்கள். நிகழ்ச்சியைப் பால்சாமுவேல் அவர்கள் சிறப்புற அமைத்திருந்தார்கள்.

4. கதிரேசன்—சுந்தரம்மாள்—வாழ்க!

கோனுபுரம் ப. பழனிச்சாமி அவர்களின் இளையமகன் செல்வன் கதிரேசன் அவர்களுக்கும், தாராபுரம் பி. கருப்புச்சாமி அவர்களின் மகள் செல்வி சுந்தரம்மாளுக்கும், கடந்த மடங்கல் 19 (4-9-78) திங்கள் காலை 5-30 மணியளவில், தாராபுரம் மணமகள் வீட்டில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் தலைமையில் சிறப்புறத் தமிழ்த் திருமணம் நடந்தேறியது. பல்லடம் தென்மொழி ந. முத்துக் குமரன் வரவேற்புரையாற்றினுர். தென்மொழி மறை நித்த லின்பனுர் உறுதிமொழி படிப்பித்தார். இறுதியில் தலைவர் சிறப் புரைக்குப்பின் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது. மணமக்கள் நீடுவாழத் தென்மொழி பல்லாற்றுனும் வாழ்த்துகிறது.

5. குருநாதன்—தையல்நாயகி—வாழ்க!

தெ.ஆ.மா.வ. வீராணநல்லூர் எம். குஞ்சிதபாதம் அவர்களின் மகன் செல்வன் குருநாதன் வணி.இ; சட்ட.இ. அவாகளுக்கும், மெய்பாத்தூர் நிலக்கிழார் க. பதஞ்சலி அவர்களின் மகள் செல்வி. தையல்நாயகிக்கும், கடந்த (6-9-78) அறிவன்கிழமை, வீராண நல்லூர் மணமகன் இல்லத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் தலைமையில தமிழ்த்திருமணம் நடைபெற்றது. ஆன்ரோர் பலர் வாழ்த்துரை நல்கினர். இறுதியில் தலைவர் அவர்களின் பேருரைக்குப்பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. மணமக்கள் இனிது வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

6. பல்லடம் குறள்நெறி மன்ற நிகழ்ச்சி:

கடந்த மடங்கல் 25-ஆம் பக்கல் 10-9-78 ஞாயிறு 10 மணி யளவில். பல்லடம் சுப்பையனுர் கிடங்கில், குறள்நெறி மன்றச் சார்பில் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குப் புலவர். சிவத்திரு. கா. கு. சிவாச்சலம் தலைமை தாங்கினுர். பல்லடம் ந. முத்துக்குமரன் அவர்கள் வரவேற்புரையாற்றினுா. சித்தோடு பாவலர். திரு. ஈவப்பனுர் உரைக்குப்பின், பாவலரேறு பெருஞ் சித்திரனுர் அவர்கள் 'திருக்குறள்-தமிழர் வாழ்வியல் நூல்' என்னும் பொருள் பற்றி அரியதொரு சிறப்புரையாற்றினுர். கூட்டத்தினர் மனம் நெகிழ்ந்து, 'இதுவா தமிழ்; திருக்குறளை

இப்படிக் கோணத்தில் பார்க்க வேண்டுமா!' என்று வியந்து பாராட்டினர்.

7. கோவை—நித்தலின்பனர் விடையனுப்பு விழா:

கடந்த 10-9-78 மாலை 5 மணியளவில், வடகோவை, கல்வி யகத்தில், கோவை. சிந்தனைப் பேரவை, செந்தமிழ்க்காப்புக் கழகம், சிங்காநல்லூர் தென்மொழி இயவம் ஆகிய மன்றங்கள் சார்பில், தென்மொழிப்பணி மேற்கொண்டு, வழிவழியாக வாழ்ந்து வந்த கோவையை விட்டுச் சென்னைக்குக் குடியேறும் தென்மொழி மறை நித்தலின்பனார் அவர்களின் வழியனுப்பு விழா நிகழ்ச்சி பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் தலைமையிலும், சிவத்திரு. ப. சு. மணியம் அவர்கள முன்னிலையிலும் நடைபெற்றது. அக்கால், கோவையில் சேரர் கொற்றத்தைத் தொடங்கி, விளம்பரப் பலகைத் தமிழ்ப்படுத்தப் போராட்டந் தொடங்கி அதனை ஓரளவு வெற்றியுற நடத்தியவரும், தென்மொழி நடத்திய விடுதலைப் போராட்டங்களில் தம்மை முன்னிலைப் படுத்திக்கொண்டு மும்முறை சிறை சென்றவரும், தென்மொழிப் புரக்குநராக இருந்து அதன் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் தம்மை ஒப்படைத்துக் கொண்டவரும், தென்மொழி யாசிரியர் அவர்களுக்கு உற்ற துணையாக நிற்பவரும் ஆகிய, தென்மொழி மறை நித்தலின்பனர் அவர்களைப் பாராட்டியும் வாழ்த்தியும் அறிஞர்கள, பேராசிரியர்கள், ஆசிரியர்கள், பொதுத் தொண்டர்கள், மருத்துவர்கள் ஆகிய பல்துறையினரும் பேசினர். நிகழ்ச்சித் தொடக்கத்தில் கல்வியக உரிமையாளரும், பன்னூலாசிரியரும், சிறந்த வரலாற்றினரும் ஆகிய திரு. கு. வெ. கி. ஆசான். க.மு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். அவர்க்குப்பின்னர், சிவத்திரு. ப. சு. மணியம், பா. பா. அர. சுப்பையன், புலவர். ந. இரா. தமிழவேள், பல்லடம் ந. முத்துக்குமரனர், கா. இளமுருகனர். க.மு , 'செந்தமிழ்' சிவகாமி, புலவர். இளமுருகு, புலவர் முத்துசுப்பையனர், ஆடலரசு, புலவர். அறிவுடைநம்பி, புலவா. பூ. அ. அரங்க சாமி, தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலர் பரமசிவம், கலைமகள் இராமநாதனர்; பாவலர். குமர. நடவரச ஈவப்பனார், தென்மொழி ஞானபண்டிதர் அவிநாசி ப. துரையரசனார், பேரா. அருணு இராசகோபால், தமிழ்மகன் சதாசிவனார் ('பிராமணீய' நூலாசிரியர்), பர். தஞ்சை. செல்வக்கோ, துரை. மடங்கன், இரா. எழிலண்ணல் முதலியோர் உணர்வுரையாற்றி விடையளித்து வாழ்த்தினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திரு. நித்தலின்பனர் தம் சென்னை வரவுக்குக் கரணியம் கூறியும், அன்பர்கள் உணர்வுரைக்கு விடை கூறியும் வாழ்த்துரைத்து அமைந்தார்கள். நித்தலின்பனர் அவர்களுக்குக் கைத்தறியாடை போர்த்துப் பரிசளிப்பும் வழங்கப்பெற்றது. மருத்துவர் சுப்பையனார் அவர்கள் நித்தலின்பனர்க்குத் தம் நினைவாகவும்

மாலைக்குப் பகரமாகவும் உரு. 50/- அன்பளிப்புச் செய்தார்கள். அதனைப் பெற்றுக்கொண்ட அந்நொடியே, தாம் தென்மொழிப் பணிக்கே தம்மை ஒப்படைத்துக் கொண்டபடியினுல், தமக்குத்தந்த அன்பளிப்பு உரு. 50/-ஐயும் தென்மொழி வளர்ச்சிக்கே தருவதாக, அனைவரும் வியப்பும் மகிழ்வும் எய்தும் வண்ணம் அதனைத் தலைவர் பெருஞ்சித்திரனுர் அவர்களிடம் அளித்தார்கள். இனிய தேநீர் விருந்துக்குப்பின் தென்மொழி தமிழப்பன் நன்றியுரை கூற நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

8. கோவை—சிங்காநல்லூர்—தென்மொழி இயவக் கூட்டம்:

கடந்த மடங்கல் 25 (10-9-78) ஞாயிறு மாலை 8-மணியளவில் கோவை. சிங்காநல்லூரில், தென்மொழி இயவத்தின் சார்பாக, முதலாண்டு வினைவிழாவும், பெரியார் நூற்றுண்டு விழாவும் இணைத்துக் கொண்டாடப் பெற்றன. இயவப் பாடகர் திரு. சண்முகம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினுர். திரு. அறிவுடை நம்பி. க.மு வரவேற்புரை கூறினுர். புலவர் திரு ந. இரா. தமிழவேள் (தமிழ் வளர்ச்சிக் கழகம்) மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினுா. புலவர். தஞ்சை செல்வக்கோ முன்னுரை ஆற்றினுர். கூட்டத்திற்கு அறிஞர். திரு. கு. வெ. கி. ஆசான், க.மு. அவர்கள் தலைமை தாங்கி தமிழீழத் தமிழர் பற்றி உணர்வுரை யாற்றினுர். அடுத்து, திருவாளர்கள் தென்மொழி மறை. நித்தலின்பனார், தென்மொழி அரங்க. தமிழ்மணி (இயவ வயவர்), சி. ப கலைமாணிக்கம் (செயலாளர்) பாவலர் குமர. நடவரச ஈவப்பனார், தென்மொழி ந முத்துக்குமரனார். க. இளஞ்சேரன் (தி. மு. க.) வ. பாலகிருட்டிணன் (அ.தி.மு க. மாணவர் பிரிவு), மணிமுகம் (இ. பேரா,) சு. ஆடலரசு, (பாரதி மனமகிழ் மன்றம்) ஆகியோர் பேசினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரை யாற்றினார்கள் இறுதியில் வெ. தமிழ்மாணிக்கம் நன்றி கூற, நிகழ்ச்சி இரவு 12 மணியளவில் இனிது முடிவுற்றது.

9) தொண்டாமுத்தூர்—அரசுயர் பள்ளி இலக்கிய மன்ற விழா:

கோவை, தொண்டாமுத்தூர், அரசுமேனிலைப் பள்ளி, மாணவர் மன்றத் தொடக்கவிழா, கடந்த 11-9-78 பிற்பகல் 4 மணியளவில் நடந்தது. திரு. டி டி. எசு. திப்பையா தலைமை தாங்கினுர். பள்ளித் தலைமையாசிரியர் வரவேற்புரை யாற்றினுர். புலவர். ந. இரா தமிழவேள், பாவலர். ஈவப்பனார் ஆகியோர் நல்லுரைக்குப்பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'இனிமைத்தமிழ்' என்பது பற்றிச் சிறப்புரை யாற்றினுர். பள்ளித் தமிழாசிரியர் நன்றியுரைக்குப்பின் விழா இனிது முடிந்தது.

(தொடர்ச்சி 35-ஆம் பக்கம்)

"தமிழில் அயற் சொற்களைக் கலக்க விரும்புவோரை எவ்வளவு கற்றவராயினும் நான் மதியேன்"

-மறைமலையடிகள்.

(தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 15,16-ஆவது ஆண்டு விழா 1927 சூலை மாதம் (கடகம் 8,9-ஆம் பக்கல்களில்) நடைபெற்றது. தவத்திரு. மறைமலையடிகளார் விழாத்தலைமை பூண்டிருந்தார். பல பகுதிகளிலிருந்தும் அறிஞரும் ஆராய்ச்சியாளரும் அன்பரும் திரளாக வந்திருந்தனர். அவ்விழாவில் அறிஞர் பெருமக்கள் பலர் உரையாற்றினர். பண்டிதமணி. திரு. மு. கதிரேசனார் அவர்கள் திருவள்ளுவரும் பரிமேலழகரும் என்னும் பொருள் பற்றி அரியதொரு விரிவுரையாற்றினார்கள். அக்கால் திருக்குறள் தொடர்பாகச் சில தவறான கருத்துகளைக் கூறியதுடன், தனித்தமிழ்க் கொள்கையையும் ஒருவாறு குறை கூறுவதுபோல் கருத்துரைத்தார். அவற்றையெல்லாம் மறுத்துரைக்கின்ற வகையில் அடிகளார் அவர்கள் தம் முடிவுரையைச் சிறந்ததொரு விளக்கவுரையாக ஆற்றினார். இக்கால் உள்ள தமிழன்பர்கள் அவ்வரிய ஆராய்ச்சியுரையைப் படித்துப் பயன் பெறுமாறு அதனை மீண்டும் இங்கு வெளியிடுகின்றோம்.)

நமது பண்டிதமணி அவர்கள் திருக்குறளின் சிறப்புக் குறித்துப் பல நுணுக்கமான பொருள்களைச் செவ்விய முறையில் எடுத்துக் காட்டினார்கள். சீத்தலைச் சாத்தனார் கதையை நினைவூட்டினார்கள்: அவர்கள் கூறிய பொருள் பிடித்தமுடையதன்று. சீத்தலை என்பது ஓர் ஊரின் பெயர். பண்டைப் புலவர் பலர் தமது பிறப்பிடத்தின் பெயரைச் சூட்டிக் கொண்டனர். மாங்குடி மருதனார், ஆவூர் மூலங்கிழார் ஆகிய பெயர்கள் சான்றாம். சீழ், தலை என்பது சீத்தலை என்று வராது. சீத்தலைச் சாத்தனார் தலைக்குத்துத் தீர்ந்த தென்பதற்குப் பயனில் மொழி கேட்டதனாலுண்டாய மண்டைக்குத்துத் தீர்ந்த தென்பதே பொருள். அறிவொளியினின்றெழும் மின்னாற்றல் தலை நோவைத் தீர்க்கும். நல்லறிவுரையே மருந்து. திருக்குறள் அவ்வாறு அவர்களுக்குத் தணிவு செய்தது. இதுவே எனக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது.... — —...

அன்பர்களே! உருவங்களை நாட்டுகிறீர்கள்! கோயில் கட்டுகிறீர்கள்! விழா எடுக்கிறீர்கள்! சத்திரம் சாவடிகள் அமைக்கின்றீர்கள். கடவுள் இயல்பும் அன்பும் நீங்கள் அறியாமையினால், இந்நாளில் கோயிலிலே கடவுளைக் காண்கின்றீர்களா? இல்லையே! குறளில் கடவுளைக் காணலாம் (கைதட்டல்) ஆங்கிலப் புலவராகிய சேக்சுபியரை ஐந்து கண்டங்களிலும் போற்றுகின்றார்கள். அதில் ஆயிரத்தில் ஒரு கூறு வள்ளுவனார்க் குண்டோ? வள்ளுவரை மறந்திருக்கின்றீர்கள்! தெள்ளுதமிழ்ப் புலவரை மறக்கலாமா? உங்கள் வருங்கால நிலைகுறித்து என் நெஞ்சம் நடுங்குகிறது! தமிழ்த்

தாயையும், புலவர்களையும் மறந்து உயிர் வாழ்தல் யாங்ஙனம்? வள்ளுவரைப் போற்றுங்கள்! அவர் பெயரால் நினைவுக் குறிகள் நாட்டுங்கள்! கல்லூரிகளை அமையுங்கள்! குறளைப் படியுங்கள்! புலவர்களைப் போற்றுங்கள்!

ஆரியர் தமிழர் சச்சரவு இன்னும் நம்மை விட்டகன்ற பாடில்லை. இப்பொழுதுள்ள ஆரியரெனும் பார்ப்பனரில் பலர் தமிழரேயாவர். வடக்கேயிருந்து வந்தவர் ஒரு சிலரே. பழைய ஆரியரது நாகரிகம் மேம்பாடுடைய தன்று. இருக்கு வேதத்தில் ஆரியரைப் பற்றிய குறிப்புகள் பல உண்டு. அவர்கள் ஆ, எருமை, குதிரை முதலான வற்றைக் கொன்று தின்றனர். கள் குடித்தனர். விருந்துகளில் ஆன் கன்றறுத்துக் கறி சமைத்தனர் என்று சதபதப் பிராமணம் சொல்கிறது. தைத்ரீய சங்கிதையில் மாட்டுக்கறி யுணவு கூறப் பட்டிருக்கிறது. ஆவைக் கொன்றோர் இழிந்தாரல்லரோ? கொல்லா அறத்தில் நின்ற நம் முன்னோராகிய தமிழ் நன்மக்கள் அவர்களோடு எளிதிற் கலந்திருக்க மாட்டார்கள். அவர்கள் சீர்திருந்தி நல்ல நிலையை அடைந்த பின்னரே கலந்திருக்கக் கூடும். இருக்கு வேதத்தில் ஆரியருக்கு வெள்ளை நிறமும் நீலக் கண்ணும் சொல்லப் பட்டிருக்கின்றன. தமிழருக்குச் சிவப்பு நிறமும் கருங்கண்ணும் குறிக்கப் பட்டுள்ளன. நாகரிகமில்லா அவ்வாரியர் இப்பொழுது இலர்; எனவே, யாரும் வருத்தப்பட வேண்டுவதில்லை. ஆரியர் வாழ்வும் தமிழர் வாழ்வும் இருக்கு வேதத்தில் இருந்து அறியலா கின்றன.

விசுவாமித்திரர் பாடிய பதிகங்கள் தமிழர்க்குரியவை. வசிட்டர் பாடியன, ஆரியர்க் குரியவை. இதனை எமது 'மாணிக்கவாசகர் வரலாற்'றில் விரிவாய்க் காண்க! தமிழர் இருக்கு வேதத்தில் முக்கால்வாசிப் பதிகம் பாடியிருக்கின்றனர். தமிழர், உபநிடதம், பிராமணம், புராணம் முதலியவற்றில் பலவற்றை எழுதினர். ஆங்கிலத்திலும் நான் நூல்கள் எழுதி வருகின்றேன். அதனால் யான் ஆங்கிலன் ஆவேனோ? அதனால் ஆரியத்தில் நூல்கள் இயற்றிய தமிழரும் ஆரியர் ஆகார். ஆங்கிலர் எழுதும் இந்திய வரலாறுகளில் தமிழரது நாகரிகம் ஆங்காங்கு எழுதப் படுகின்றது. இராப்சன் கேம்பிரிட்சு வரலாற்றில் தமிழரின் நாகரிக நிலையினையும், அதனால் ஆரியர் சீர்த்திருந்தினமையும் குறித்திருக்கின்றார். ஆரியரைப் போல் தமிழரும் ஆரியமொழி வழக்கை ஒரோ விடங்களில் எடுத்தாண்டிருக் கின்றனர்.

சடை எனுஞ்சொல் தமிழே யாகும். தமிழிலிருந்தே வடமொழி பெற்றது. 2200 ஆண்டுகளுக்கு முன்னரேயே பரிபாடலில் சடையன் எனுஞ் சொல் வந்துள்ளது. இருக்கு வேதத்தில் சடை எனுஞ் சொல் இல்லை. தொல்காப்பியம் முற்றிலும் பத்து வட சொற்களே உள்ளன. 2000 சொல்லுக்கு ஒரு வட சொல்லே உண்டு. மணிப் பவள நடை பிற்காலத்ததே!

இப்பொழுது தமிழுக்குப் பரிந்து பேசுவோர் பலரிலர். தமிழராய்ப் பிறந்த 'பாவி'களே தமிழைப் பாழ்படுத்தி விட்டார்கள்! பாழ்படுத்துகிறார்கள். பழம் புலவர்களிலும் சிலர் பாழ் செய்தற்கு இடங்காட்டி விட்டார்கள். தொல்காப்பியரும் ஓர் இழையளவு வழுவியே விட்டார். அஃது ஒண்டவந்த பிடாரிக்கு ஊர்ப்பிடாரி இடங் கொடுத்த கதையாகவே முடிந்தது.

அன்பர்களே! நாம் தமிழை உயிரோடு வைக்கப் பாடுபட வேண்டும்! ஐயோ தமிழைக் கொல்ல மடிகட்டி நிற்கலாமா? நூற்றுக்கு எண்பது வடசொல்லும் இருபது தமிழ்ச் சொல்லுமாக எழுதினால், பேசினால் தமிழ் எப்படிப் பிழைத்தல் கூடும்? வடமொழி பயில வேண்டாம் என்று நான் கூறவில்லை. மகிழ்வுடன் பயிலுங்கள். நானும் பயில்கின்றேன். ஆனால் அன்பர்களே! தமிழ்த் தாயைக் கொல்லாதீர்கள்! தமிழ் நன் மங்கையின் அழகிய மேனியில் அம்மைத் தழும்பு போல் வடசொற்களைப் புகுத்தாதீர்கள்! அடியனேன் உங்களைப் பெரிதும் கெஞ்சுகிறேன், ஆண்டவர்களே! தமிழைக் கெடுக்காதீர்கள்! தனித் தமிழுக்குப் பாடுபடுங்கள். (கைதட்டல்).

பண்டைப் புலவராயினும், இக்காலத்தவராயினும், மற்று எவராயினும் தமிழுக்குக் கேடு விளைத்தோரை, விளைப்போரை நான் ஒரு பொருளாகக் கருத மாட்டேன். பழம் பெரும் புலவர் ஒருவர் ஒரு வடசொல் வழங்கியிருந்தால் பிற்காலத்தவர் நூறு சொற்களை வழங்குகின்றார். நாம் இலக்கம் சொற்களை வழங்குகின்றோம். பெரிய கடன்காரராகின்றோம். (பெருஞ்சிரிப்பு) கழகத் தமிழ் வழக்கை இடைக்காலத்தவர் பின்பற்றியிருந்தால் அவர்களுக்குப் புகழுண்டு. இடையில் வந்து தமிழைக் கெடுத்தவர்களை நான் ஒருநாளும் பொருட்படுத்தேன்! தமிழிற் பிற மொழிக் கலப்பை வெறுத்துத் தள்ளுங்கள். தமிழின் சுவையை மாற்றாதீர்கள். வல்லோசைகளைப் பெருக்காதீர்கள். தமிழர் ஆரியத்திற்கு அடிமைப்பட்டு அச்சொற்களைக் கலத்தல் தீங்கே! இவ்வடிமைத் தனத்தினின்று முதலில் விடுபடுங்கள். இது முதலில் பெறவேண்டிய விடுதலை. (நீண்ட கை தட்டல்.)

தமிழ் பெயரளவிலே விளங்குகிறது. எங்கும் ஆரியமொழி கூத்தாடுகிறது. உண்மைத் தமிழராயின் உங்களுக்கு உறுதிப்பாடு வேண்டும். தமிழைத் தமிழாகவே வழங்க வேண்டும். தாய்க்குத் தகுந்த பிள்ளைகள் தோன்றல் வேண்டும். தமிழில் அயற் சொற்களைக் கலக்க விரும்புவோரை எவ்வளவு கற்றவராயினும், (பேருணர்வுடன் மிசையில் ஒரு குத்துக் குத்தினார்) அவரை நான் மதியேன்! மதியேன்! ... தனித்தமிழுணர்ச்சி பரவவேண்டும். பழநூல்களில் ஒன்றிரண்டு சொற்களிலிருந்தால் கடன் வாங்கியதென முடிவுகட்டி விடக் கூடாது. அது பெருந் தவறு. இந்நாட்டுப் பார்ப்பனர் தம்மை ஆரியர் எனத் தப்பாக எண்ணி இடர்ப்படாது தமிழைப் போற்ற வேண்டும். தமிழ்த் தொண்டு புரிவார் யாவராயினும் அவருக்குப் பெரிதும் நன்றி செலுத்தவேண்டும்.

—செந்தமிழ்ச் செல்வி.

(சிலம்பு–5. பரல் 6–1927)

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்:

மருத்துவ அறிஞர்: கோ. கோவிந்தனார்.

(முன்னுரை: இக்கட்டுரை நாகரிக மிதப்பில் தம்மை அழித்துக் கொள்ளும் இக்கால இளைஞர்களுக்கு ஒரு சிவப்புக் கொடி. அறியாமையால் தங்களை இழந்து விட்ட மணமானவர்களுக்கு ஒரு பச்சைக் கொடி. ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகளை அடிமுடியாக ஆராய்கிறார் இக் கட்டுரையாசிரியர், மருத்துவ அறிஞர் திரு. கோ. கோவிந்தனார், இக் கட்டுரையை ஒவ்வோர் இளைஞரும் மணமான நடுத்தர அகவையினரும் கட்டாயம் ஊன்றிப் படித்துத் தெளிதல் வேண்டும். அகவை முதிர்ந்தோர் தம் மக்களுக்கு இதனைக் காட்டிப் படிக்கச் செய்தல் வேண்டும். குழந்தைகளுக்கும் விளங்குவது போன்ற எளிமையும், இளைஞர்கள் மேல் வைத்த அன்பும் தோன்ற, அருமையான நடையில் இக்கட்டுரையை எழுதியுள்ளார் இதன் ஆசிரியர். நெடுநாளாக இதனை வெளியிட முயன்றோம். இப்பொழுது தான் முடிகிறது. தவறாமல் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம்.

—இதழாசிரியர்.)

1. உடம்பின் உயர் தன்மை.

முருகன் தமிழர் கடவுள். முருகு என்றால் அழகு, இளமை, எழுச்சி என்று பொருள். "**என்றும் இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே**" என வழுத்துகின்றார் நக்கீரர். தமிழர் கடவுள் என்றும் இளையர், அழகர். அழகுள்ள இடத்தில் இளமை மிளிரும். இளமை உள்ள இடத்தில் எழுச்சி பீறிட்டெழும். என்னே தமிழ் மகனுக்கு, இளமையின் பேரில் உள்ள பெரு வேட்கை! '**தளையவிழ் கோதை நல்லார் தங்களோடு இன்பம் எய்த இளையனும் அல்லேன்**' என ஏங்குகின்றார் செம்பொன்னும், ஓடும் ஒக்கவே நோக்கும் செம்மல், திருநாவுக்கரசர் என்றால், நம் போன்றோர் இளைஞராக முயல்வதில் வியப்பும் உண்டோ!

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்.
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே;
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே".

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்!
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்!
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே!

—என்று இளமைக் கிடனாயுள்ள உடம்பின் பெருமையை உயர்த்திப் போற்றுவார் பெருமாமுனிவர் திருமூலர்.

இவ்வாறு சிறப்பாகப் பேசப் பெறும் உடம்பினை இக்காலத்தவர் நலமுறப் போற்றுகிறாரில்லர். உடம்பின் பொற்காலமாகிய இளமைக் காலத்தை மிகக் குறுகிய பொழுதிலேயே தொலைத்து விட்டு முதுமைப் பாறையில் மோதிக் கொள்கின்றனர் பெரும்பாலார்.

இக்கால இளைஞர்களுக்கு உள்ள பெரும்பாலான நோய்களுள் பாலியல் தொடர்பான நோய்களே மிகுதி. மக்களுள் பெரும்பாலார் ஆண்மைக் குறைவால் அல்லற்படுவதைப் பார்க்கும் பொழுது, இஃது அறியாமையால் நேர்வதோ, அன்றிக் காலத்தின் கோளாறோ என்று எண்ணிக் கவலைப்பட வேண்டியிருக்கின்றது. பாலியல் கோளாறு களிலேயே மிகவும் வருந்த வேண்டிய ஒரு நிலை ஆண்மைக் குறைவு அல்லது அலித்தன்மையே யாகும். இதைப் பற்றி யாரும் கவலைப் படுகின்ற அளவுக்குக் கூட அறிவு பெற்றவர்களாயிருப்பதில்லை என்பது வியப்பான ஒரு செய்தி யாகும்.

2. ஆண்மைக்குறைவும் அலித்தன்மையும்.

பெரும்பாலும் நாற்பதாண்டிற்கு மேல் ஒருவரின் பால் உணர்ச் சியும், ஆண்மையும் படிப்படியாகக் குறைந்து, ஆண்டு செல்லச் செல்ல முடிவை எதிர் நோக்கி விரைகின்றன. ஆணின் பால் தன்மையைப் பற்றி ஆராய்ந்த மருத்துவர்கள், மாந்தர்களில், குறைந்தது நூற்றுக்கு ஐம்பது பேர், புணர்ச்சி நோய்த் தொடர்பு இல்லாத, வேறுவகைப் பாலியல் கோளாறுகளாலும், அலித்தன்மை யாலும், துன்புறுகின்றனர் எனக் கணக்கிட்டுள்ளனர். இக் கோளாறுகள் உள்ளோரை மேலளந்த வாரியாக நோக்கின் எவ்வகைக் குறைபாடுகளும் தோன்றா, நலத்துடன் இருப்பவர்கள் போன்றே காணப்படுவர். இக் குறைகள் உள்ளவர்கள், இக் குறைகளை முதன்மை யற்றவை, விலக்க இயலாதவை என நினைக்கின்றனர். அதனால் அவர்கள் மருத்துவர் உதவியை நாடுவதே இல்லை. ஒருவருக்கு நீரிழிவோ அல்லது வேறு நோய்களோ காணின் எவ்வகைக் கூச்சமு மின்றி விரைந்து மருத்துவரின் உதவியை நாடுவர். ஆனால் அலித் தன்மை உடையவரோ மருத்துவர் இருக்கும் பக்கம் கூடச் செல்வ தில்லை. அலித்தன்மை கொல்லும் தன்மை உடையதன்று. தொற்று நோயுமன்று. அதனால் அலித்தன்மை உடையவருக்கு மருத்துவரை உடனே சென்று காணவேண்டும் என்ற நினைப்பே எழுவதில்லை. ஆனால் அலித்தன்மை நாள் ஆக ஆகப் பிற நோய்கள் செய்யும் தீங்கை விட மிகுந்த தீங்கை விளைவிக்கின்றது. இக்குறை மாந்தனை கொஞ்சம் கொஞ்சமாக அரித் தெடுக்கின்றது. மணவாழ்க்கையின் இன்பத்தை அழித்து எப்பொழுதும் துன்பமே குடி கொண்டு இருக்கச் செய்கிறது. இக்குறை உள்ள மாந்தன் எப்பொழுதும் இக்குறை யையே நினைந்து நினைந்து மனம் உருகி நைந்து, ஆறுத்துயர் எய்தி, வாழ்க்கையே கசந்து வாழ்க்கையில் உள்ள பிடிப்பு விட்டு, தற்கொலை கூடச் செய்து கொள்ள முற்படுகின்றான். இக்குறை

உள்ளவர்கள் நூற்றுக்கு ஒருவர் கூட மருத்துவரை நாடுகிறுரா என்பதே ஐயம்.

3. அலித்தன்மை தீராத நோயன்று:

மேக (கிரந்தி) நோய்க்கு மருத்துவம் செய்யாது விட்டு விடுகிறேம் எனக் கொள்வோம். மேக நோய் முற்றி, முடிவில் நரம்பு' இழையம் எலும்பு /ஆகியவை அழிகின்றன. அலித்தன்மைக்கு மருத்துவம் செய்யாது விட்டு விடுவதாகக் கொள்வோம். அலித் தன்மையால் ஏற்படும் மேலே விளக்கப்பெற்ற குறைகள் எல்லாம் முடிவில் வந்தடையும் என்றே, அல்லது கொஞ்சம் கொஞ்சமாக வந்தே தீரும என்றே பொருள் அன்று. அலித்தன்மையால் ஏற்படும் தீங்குகளில் பெரும் பகுதி, இக்குறையை அந்நோயாளி உள்ளத்திற்கு உள்ளேயே வைத்துப் புழுங்கி உருகி உருகி நைவதால் ஏற்படுவ தாகும். சிறு பகுதி அலித்தன்மையால் ஏற்படுவதாகும். ஆகவே நோயால் மட்டும் ஏற்படும் தீங்கு சிறிதளவே. ஆனல் நோயைப் பற்றி நினைந்து நினைந்து நைவதால் உண்டாகும் தீங்கோ பெரும் பகுதி யாகும். இத் தீங்கின் அளவு மாந்தனுக்கு மாந்தன் வேறுபாடு உடையது. நரம்புத் தளர்ச்சி உடையவர்களையும், எளிதில் உணர்ச்சி யின் பாற்படுகிறவர்களையும் இத் தீங்கு மிகுதியாகத் தாக்குகின்றது. அலித்தன்மை உடைய மாந்தன் தன் நோயைப் பற்றிக் கூறக் கூசப்படுகிறுன். தன்னைப் பற்றி குறைவாக நினைக்கின்றுன். இவையே அந் நோயால் ஏற்படும் கேடுகளுக்கு மூலகரணியங்களாம். இக் கூச்சமும், தாழ்வு மனத்தன்மையும் அவனை விட்டு நீங்குவதே இல்லை. தன் மனைவியுடன் புணரும் ஒவ்வொரு முறையும் தோல்வியே யடைகின்றுன். புணரும் ஒவ்வொரு முறையும் அவனுடைய கூச்சமும் தாழ்வு மனத்தன்மையும் பேருருக் கொண்டு அவனை ஆட்டி அலைக்கழிக்கின்றன. உணர்வுடன் இருக்கும் ஒவ்வொரு விநாடியும் இதையே நினைந்து கொண்டிருக்கிறுன். மன உளைச்சலுடன் அவன் கழித்த தூங்காத இரவுகள் பலப்பல நீடித்து, தொடர்ச்சியாக, மனக்குழுறலும், துன்பமும் ஒரு மனிதன் உள்ளத்தில் நிலைத்து நிற்கு மாயின், அவனுக்கு எக்கேடுதான் விளையாது? அவனுக்குக் கேடு விளைந்தது பற்றி யாரும் வியப்படைய வேண்டியதே இல்லை. வேறு காரணங்களால் மன உளைச்சல் ஏற்பட்டாலும் ஒரு மாந்தனுக்குக் கேடுகள் விளையலாம். ஆனல் அலித்தன்மையால் ஏற்படும் மன உளைச்சல் காரணமாய் உண்டாகும் கேடுகளுக்கு, முன் கூறப்பட்ட கேடுகள் ஒப்பாகா. அலித்தன்மை காரணமாக உண்டாகும் மன உளைச்சல் கேடுகள் மிகக் கொடியன. அவற்றுக்கு நிகர் அவையே!

4 அச்சமோ கூச்சமோ வேண்டியதில்லை.

மேலே கூறியவற்றை உற்று நோக்கின் இம் மன உளைச்சல் தேவையற்றது, அறிவிற்குப் புறம்பானது என்பதைத் தெற்றெனத் தெளியலாம். ஆனல் அந்தோ! அலித்தன்மை உடையோரில் கை

விட்டு எண்ணக் கூடிய மாந்தர்களே இவ்வுண்மையை அறிவர். அறிந்து பயன் அடைகின்றனர். இக்கால நாகரிக உலகம், உடற் சேர்க்கையைத் தாழ்வானது, விலங்குச் சார்பு உடையது என நினைக்கின்றது. ஒரு மாந்தனின் ஆண்மையை, அவனுடைய பால் உணர்ச்சியின் விரைவைக் கொண்டு அளக்கின்றது. பால் உணர்ச்சியில் விரைவு அற்றவர்களிடம் இரக்கம் காட்டுவது போல் நடிக்கின்றது. ஆனால் உண்மையில் இடித்துரைத்து நகைக்கின்றது. மாந்தனுக்கு எத்தனையோ குறைகள். அவற்றில் ஒன்றுதான் அலித்தன்மை. அலித்தன்மைக்காக மட்டும் குறிப்பிட்டுக் கவலைப் படவோ, கூச்சப் படவோ தேவையே இல்லை. வயிற்றுவலி, (ஈளை) ஆத்துமா, செவிட்டுத் தன்மை, நீரழிவு போன்ற நோய்களுடன் மாந்தன் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருக்கலாம். சில வேளைகளில் தங்கள் நோய்களைப் பற்றி வேடிக்கையாக விளக்கம் கூறிக் கூட சிரிப்பர். அலித்தன்மையால் ஒருவர் துன்புறுகிறார் என்றால், ம்.... ....அவர் மறந்து கூட தன் நோய் பற்றி பேச்சு மூச்சு விடமாட்டார். ஏதோ வரக்கூடாதது தமக்கு வந்து விட்டது என நினைந்து உள்ளத்திற்குள்ளேயே குமுறிக்கொண்டிருப்பார். மருத்துவரை நாடவே மாட்டார். அந்தோ! பிற நோய்களை விட அலித்தன்மை கொடியது என்பதை அவர் அறிந்திலர்.

அலித்தன்மைக்குக் காரணம் கண்டு பிடித்தல் மிகமிகக் கடினம். குழந்தை நிலையிலிருந்தே, சுற்றுப் புறத்தின் சூழ் நிலையால் அலித்தன்மையின் வேர் மனதில் ஊன்றத் தொடங்கலாம். இன்றைய உலகில் எங்குத் திரும்பினும் காமம் காமம்! பேச்சிலும், எழுத்திலும் நடத்தையிலும் காமம் தலை விரித்தாடுகிறது. இக்காம வெறி பிடித்த உலகிலே தான் இக் குழந்தையும் சுற்றிச் சுழன்று வருகின்றது. இக் காம வாடை இக் குழந்தைக்கும் அடிக்காமல் போகுமா? இக் குழந்தை இளைஞன் ஆனதும், ஒரு பெண்ணின் பால் பசியை முழுக்க முழுக்கத் தணித்துத் தன் பிற்காலக் கால்வழிக்கு வித்திடல்தான் தன் தலையாய கடன் என நினைக்கின்றான். அவ்விளைஞன் அவற்றைச் செய்ய வலு அற்றவனாக இருப்பின், தன்னை ஒரு மாந்தனாகவே அவன் நினைப்பதில்லை. அவன் நினைப்புப் பிழை என எவ்வளவு விளக்கம், கூறினும் பயன் ஏற்படுவதில்லை

5. பாலுணர்வும் மூளைத்திறனும்.

வாழ்க்கைக்குப் பால் உணர்ச்சி வேண்டியதுதான். ஆனால் இன்றைய உலகம் நினைப்பது போன்று, பால் உணர்ச்சி ஒன்றுதான் வாழ்க்கையின் குறிக்கோள் அன்று. மாந்தனுக்குப் பால் உணர்ச்சித் தொடர்புடைய செய்கைகளுடன் வேறு சில பொறுப்புகளும் உலகில் உள்ளன. கடவுளை நேருக்கு நேர் கண்ட திருநாவுக்கரசரும், குமர குருபரரும், இராமலிங்க வள்ளலாரும், அறிவுக் கடல் மாதவ சிவஞான முனிவரும் பால் உணர்ச்சியே அற்றவர்கள். மூளையின் வேலைக்கும் பால் உணர்ச்சியின் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாமெல்லாம் மூளையைஓர் அளவுக்குத்தான் பயன்படுத்த முடிகின்றது.

பேரறிவாளர்களாவதற்கு மூளையின் தனித்தன்மை வேண்டற்பாலது. அதேபோன்றுதான் பால் உணர்ச்சியின் தன்மையும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாக வேலை செய்யக் கூடியன. பால் உணர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களுக்கு மூளை அவ்வளவாக வேலை செய்யாது. பால் உணர்ச்சி குறைந்த அளவில் உள்ளவர்கள், இலக்கியத்திலும் அறிவியலிலும் பேரறிவு உள்ளவர்களாகத் திகழ்வதைப் பார்க்கின்றோம். ஆற்றலுக்கும், ஆண் தன்மைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு மாந்தனிடமுள்ள பால் ஆற்றல் மாறலாம். ஆனால் அதே நேரத்தில் அவனுடைய மற்ற ஆற்றல்கள் எவ்வகை மாற்றமடையாமலும் இருக்கலாம். கண்ணின் ஒளி மங்கிற்று என்றால் உடல் முழுவதுமே குன்றிப் போகும் என்பது பொருள் அல்லவே. உருண்டு திரண்டு உடல் கட்டோடு உடையவர்களுக்குப் பால் உணர்ச்சி மிகுதி எனச் சிலர் பிழைபட நினைக்கின்றனர். குத்துச் சண்டை வீரர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றோர்க்குப் பால் உணர்ச்சி மிகமிகக் குறைவு. அதோ! வருகிறாரே ஒல்லியாக வெட வெட என்று! புல் தடுக்கி மறவர்! அவரைக் கேளுங்கள் அவர் கூறுவார், தம்மால் புணர்ச்சி இல்லாது ஒரு நாள் இரவு கூட இருக்க இயலாதென்று!

6. கவர்ச்சியான விளம்பரங்களால் ஏமாற வேண்டா.

அலித்தன்மை கூச்சம் கொள்ளும் அளவுக்கு உள்ள ஒரு குறை அன்று. மேலும் அதைப் போக்கும் வழிகள் உள எனின் அவ்வழிகளைக் கைக் கொள்ளலாமே. உலகம் தோன்றியதிலிருந்து மாந்தன், தான் இழந்த ஆண்மையை மறுபடி அடைய வழி முறைகளைத் தேடி அலைந்து கொண்டேதான் இருக்கின்றான். நம் மருத்துவ நூல்களிலும், மேல்நாட்டு மருத்துவ நூல்களிலும் இழந்த ஆண்மையைப் பெற பல மருந்துகள் பல முறைகள் கூறப்பட்டுள்ளன. சித்தர் நூல்களை ஆராயின் இவற்றைப் பரக்கக் காணலாம். செம்பைப் பொன்னாக்க மாந்தன் முயல்வது எவ்வளவு பழமையானதோ, அதை விடப் பழமையானது மாந்தன் தான் இழந்த ஆண்மையைப் பெற முயல்வது. தற்காலத்தில் போலி மருத்துவர்கள் மாந்தன் இழந்த ஆண்மையைக் கொடுத்தே தீருவோம் எனக் கச்சை கட்டித் திரிகின்றனர். நாள் தாள்களையோ, கிழமைத் தாள்களையோ, திங்கள் தாள்களையோ, சிறப்பு மலர்களையோ எப்பக்கம் திருப்பினும், "இழந்த ஆண்மையை ஒரே கிழமையில் அடையுங்கள் இல்லை என்று மெய்ப்பிக்கப் பட்டால் ஐநூறு ரூபாய் பரிசு. முனிவர் அருளிய முறை. வாய்ப்பை நழுவ விடாதீர்கள்" இவை போன்ற பகட்டான விளம்பரங்களைப் பார்த்துப் பார்தது அப்பப்ப! கண்களும் சோர்ந்தன. எத்தனை வகை மாத்திரைகள், மருந்துகள். நெய்மங்கள், கருவிகள் என்று இப்போலி மருத்துவர்கள் விளம்பரம் செய்கின்றனர். இவற்றைச் செய்தித்தாள்கள் பணத்

திற்காக வெளியிடுகின்றவே. அந்தோ! மக்களின் பணம் இவ்வாறு கொள்ளையிடப்படல் வேண்டும். இது பகற் கொள்ளையன்றோ? அதனால் அருமை நண்பர்களே! உங்களுக்கு ஆண்மை குறைவாக இருக்குமானால் இம்மாதிரியான போலி விளம்பரங்களை நம்பி ஏமாறு தீர்கள். நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபட்டுச் சேர்த்த அரிய பணத்தை ஏமாற்றுக்காரர்களை நம்பி இழக்காதீர்கள். அவ் விளம்பரங்கள் எல்லாம் பொய், பித்தலாட்டம்! இழந்த ஆண்மையைப் பெற, பால் சார்புடைய குறைகளைப் போக்குவதில் பெயர் பெற்ற வல்லவரான மருத்துவர்களை அணுகுங்கள். 'ஒரே கிழமையில் இழந்த ஆண்மையை அடையலாம்' என்பது போன்ற விளம்பரங்களை நம்பாதீர்கள்.

7. ஆண்மைக் குறைவைக் கட்டாயம் போக்கலாம்.

மருத்துவ வல்லுநரின் மேற்பார்வையில் இழந்த ஆண்மையைப் பெற முயன்றால் வெற்றியடையலாம். மூப்பால் ஏற்படும் ஆண்மை இழப்பைத் தவிர, மற்ற காரணங்களால் ஏற்படும் ஆண்மை இழப்பைத் திரும்பப் பெற பல நல்ல வழிகள் உள. ஆனால் சில சிக்கலான நோய்களால் ஏற்படும் ஆண்மை இழப்பை, திரும்பப் பெற எவ்வளவு முயன்றும் பயன் ஏற்படுவது இல்லை.

மருந்துகளின் இப்போதைய விலைகளையும், மருத்துவர்களின் கூலியையும் நோக்கினால், ஏழைகளால் இந்நோயைத் தீர்ப்பது பற்றி நினைக்கக் கூட இயலாதோ என்ற ஐயம் உண்டாகிறது. இச் செலவு களை செல்வர்களால்தாம் தாங்கமுடியும். கை ஒடிந்தாலோ, காய்ச்சல் அடித்தாலோ, என்புருக்கி நோய் ஏற்பட்டாலோ அவற்றை நலமாக்க அரசியலாரால் நடத்தப்படும் மருத்துவமனைகள் உள. ஏழைகளுக்கு எவ்வகைப் பணச் செலவும் ஏற்படாது என எதிர்பார்க் கலாம். ஆண் தன்மை குறைந்தவர்களை எந்த அரசியலார் மருத்துவ மனையிலும் சேர்த்துக் கொள்வர். இக்குறை அந்த நோயுள்ள மாந்தனைக் கொல்லாது. பொதுவாக வேலை செய்வதைத் தடை செய்யாது. அதனால் அம்மாந்தனைப் பிறர் நோயாளியாகக் கருதுவதே இல்லை.

அலித்தன்மை உலகில் பரவி உள்ள அளவையும் அதனால் ஏற்படும் தீங்கையும், அத் தீங்கை விலக்க இயலும் என்பதையும் விலக்கும் வழிகள் ஏழைகளின் பண நிலைக்கு அப்பாற்பட்டன என்ப வற்றையும் கண்டோம். அலித்தன்மை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? உண்டாகக் காரணங்கள் யாவை? அதை விலக்க இன்றுள்ள மிக உயர்ந்த வழிகள் யாவை? அவையுள்ளும் துன்புறு வோர் தாமே பிறர் உதவி இன்றி அன்றாட வேலைகளுக்கு இடையே செய்யக் கூடியன எவை என்பவற்றைப் பொது மக்களும் புரிந்து கொள்ளும்படி எழுதினால் பயன்படக் கூடும் என்ற நினைப்பில் எல்லாம் வல்ல இறைவனை மனதில் நிறுத்தி இச்சிறு நூலை எழுத முற்படுகின்றேன்.

(தொடரும்)

நூல் நிறை

அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலேயில் இட்ட புதுமணலேச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு.

நூல்: **கிரேக்க நாடகத்தில் தமிழ் உரையாடல்.**

ஆசிரியர்: **திரு. இரா. மதிவாணன், க.மு., கல். இ.,**

பதிப்பு: **தாய்நாடு பதிப்பகம், 31**, புகைவண்டி நிலேயப் பாதை, வில்லிவாக்கம். சென்னே 49.

விலே: **உருபா இரண்டு.** பக்கம்: **36,**

இஞ்ஞான்று தமிழ் நாடகங்களில் ஆங்கிலச் சொற்களேயும், ஆங்கிலத் தொடர்களேயும் கலந்து எழுத்தாளர்கள் எழுதி நகைச்சுவை யூட்டி வருகின்றனர். அஃதேபோல் பண்டைக் காலத்தில் தமிழ்த் தொடர்களேக் கிரேக்க நாடகங்களில் கையாண்டிருக்கின்றனர்! காலம் எவ்வாறு தலேகீழாக மாறிவிட்டது!

கி.பி இரண்டாம் நூற்ருண்டில் நடிக்கப் பெற்றது இந்நாடகம். 1889-ஆம் ஆண்டு விவிலிய அகழ்வாய்வியல் கழகத்தாரால் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாய்வில் பெர்ஞர்டு. பி. கிரேன்பெல், ஆர்தர் எச். அண்டு என்பார் 1903-இல் இதனே நூலாக வெளியிட்டனர். இஃது ஒரு நகைச்சுவை நாடகம்.

கரிதியோன் என்னும் கிரேக்கக் கன்னிப்பெண் எவ்வாருே தமிழகத்தில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் நிலாக் கோட்டத்தில் பணிப் பெண்ணுக இருந்தாள். அவள் தமையனும் தோழரும் இந்நாடு போந்து, அவ்வூர்த் தலேவன் மக்களேக் கள்ளூட்டி மயக்கிக் கரிதியோனே மீட்டுச் சென்றமையை இந்நாடகம் தெரிவிக்கிறது. இதில் ஏறத்தாழ 48 தமிழ்-திரவிட மொழித் தொடர்கள் உள்ளன. ஆய்வுக்குதவும் அருநூல். தமிழர் பெருமிதம் கொள்ளத் தக்கவகையில் வெளியிட்ட ஆசிரியரைப் பாராட்டுகிருேம். **—தமிழ்க் காதலன்,**

நூல்: **தமிழ் வளர்ச்சி.**

ஆசிரியர்: **திரு இரா. மதிவாணன்; க.மு., கல். இ.,**

பதிப்பு: **தாய்நாடு பதிப்பகம், 31,** புகைவண்டி நிலேயப் பாதை, வில்லிவாக்கம், சென்னே-49.

விலே: **உருபா: 3.50.** பக்கம்: **92.**

கல்வியிற்சிறந்த திரு. இரா. மதிவாணன் அவர்களின் அரிய படைப்பு 'தமிழ் வளர்ச்சி' யாகும். பன்னிரண்டு தலேப்புகளில் தமிழுக்கு நலமும் தமிழர்க்கு உரமும் ஊட்டியுள்ளார் ஆசிரியர்.

''தமிழர்க்கு இன்று வேண்டுவது தளரா உழைப்பும் தனித்தமிழ் முயற்சியுமே'' (ப: 26)

"சீனமொழி பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்வதே இல்லை. பிறநாட்டு இடப் பெயர்கள் இயற் பெயர்களைக் கூட சீனர்கள் தம் மொழியில் பெயர்த்துக் கொள்கின்றனர். எத்தகைய அறிவியல் சொல்லாயினும் அதனை உடனுக்குடன் தம் மொழியில் மொழிபெயர்த்துப் புதுச் சொல்லைப் படைத்திட்டுக் கொள்கின்றனர். (ப: 27)

செல்வவளம் ஒரு நாட்டின் உயர்வுக்கு முழு அடிப்படையன்று. ஒரு நாட்டின் மொழி வளமும் மொழிவழி அறிவு நலமும் பண்பு வள மும் மிகுதலே நாட்டின் உயர்வுக்கு அடிப்படையாகும்.

இவ்வுண்மைகளையெல்லாம் ஆசிரியர் பல எடுத்துக் காட்டு களுடன் விளக்கியுள்ளார்.

'தமிழைப் பயிலாத தமிழன் தானாக வலையில் விழுந்த மானைப் போல் பிறமொழிக்கு அடிமையாகி விடுகிறான் (ப: 44) என அறிவுறுத்துமிடம் மக்கள் உணரத் தக்கதாகும்.

'உருசிய மொழியைக் கெடுப்பதை நிறுத்துங்கள். பிற சொற் கலப்பை எதிர்த்துப் போரிடுங்கள்" என இலெனின் அறிக்கை விடுத்தார்.

தமிழுக்கும் மங்கோலிய மொழிக்கும் நிறைய ஒப்புமைகள் உள்ளன.

ஞெகிழி எனின் தீக்கடைகோலாம் இது தெலுங்கில் 'நெகிடி' என இன்றும் வழங்குகிறது.

மதமாற்றம் தமிழகத்தில் நேர்ந்தமை குறித்து ஆசிரியர் கூறும் பகுதி அரிய பகுதியாகும்.

தனித்தமிழியக்கம் வளர்ந்தாற்றான் கிளைமொழியினரும் உண்மை தெளிந்து உலக ஓரினத் தமிழினம் உருவாகவியலும்.

நூலின் இறுதிப் பகுதியில் இருபத்தைந்து கருத்துரைகளைத் தமிழ் வளர்ச்சிக்காக ஆசிரியர் பரிந்துரைத்துள்ளமை ஆட்சியினர், மக்கள், கட்சியினர் கண்களிற்படுவதுடன் கருத்திணையுந் தொட்டு இயக்க வேண்டும். அப்போதுதான் தமிழின் எதிர் காலம் சிறக்கும்.

"தமிழ் போன்ற திரவிடமொழியை நன்றாகக் கற்ற ஐரோப்பியர் ஒருவர் அத்தகைய வியத்தகு மொழியை வளர்த்துள்ள மக்களினத்தை மதிப்போடு கருதாமல் இருக்க முடியாது" என்னும் கால்டுவேலர் கருத்து தமிழர் நெஞ்சில் கல் வெட்டாக வேண்டும்.

எதிர்காலம், தமிழரைப் பாராட்ட வேண்டுமாயின், தமிழை உடனே போற்றி வளர்க்க வேண்டும். மதிவாணனாரின் நூற்கள் இப்பணிக்குப் படைக்கலமாக விளங்குகின்றன.

—அரசியல் நோக்கன்

பெரியாரின் பண்பு நலன்கள்.

(பெரியார் ஒரு குமுகாயச் சீர்திருத்தக்காரர்; ஒரு பச்சை இறைமறுப்புக்காரர் என்பது எல்லாருக்கும் தெரியும். எதையும் அறிவியல் கண்ணோட்டத்துடனும், பொருள் முதல் தருக்கக் கொள்கையுடனும் அணுகும் அவரின் வேகமான உணர்வுகளுக்கிடையில், அவர் உள்ளத்தில் வளர்ந்திருந்த தூய்மையான நல்லுணர்வுகளும் மாந்தப் பண்பின் மீமிசை வளர்ச்சி நலன்களும் நம்மை வியப்படையச் செய்கின்றன. அவர்போலும் கூர்மையான அறிவு வளர்ச்சி பெற்ற பேரறிஞர் பலர் பல வகையான தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி, உள்ளத்தின் செழுமையையே இழந்து விட்டிருக்கின்ற நிலைகளை நாம் வரலாறுகளில் பார்த்திருக்கின்றோம்; படித்திருக்கின்றோம். ஆனால் பெரியாரிடைப் பூத்துக் குலுங்கிய மனவளமை அவரை யொத்த வேறு மக்கள் தலைவர்களிடையிற் பார்ப்பது அரிதினும் அரிது. அவரிடம் வலிவான கொள்கைப் பிடிப்பு இருந்ததைப் போலவே, பண்பும், ஒழுக்கமும், தூய்மையான அன்பும், தம்மினும் பல மடங்குத் தாழ்ந்தவர்களையும் மதித்துப் பாராட்டும் பெருந்தன்மையும் நிறைந்த சான்றாண்மையும் அவரிடம் சிறந்து விளங்கிக் காணப்பெற்றன. அத்தகைய தனிச் சிறப்பியல்புகளால் அவர் எதிரிகளையும் கவர்ந்தார். பகைவர்களும் மதித்துப் போற்றும் உயர்ந்த நிலையை எய்தினார். அவரின் புறக் கொள்கைகளுக்கு மதிப்பளித்துப் போற்றிப் பின்பற்றும் நாம், அவரின் அக நலன்களையும் போற்றிப் பின்பற்றுதல் வேண்டும். குறிப்பாக அவரைக் கட்சியளவில் பின்பற்றும் கொள்கைப் பற்றாளர்களிடம் இத்தகைய அரும் பண்புகளும் வளர்தல் வேண்டும்.

அண்மையில், மறைத்திரு. மறைமலையடிகளாரின் மகனார் தமிழ்த்திரு. மறை திருநாவுக்கரசர் நம் தென்மொழியகத்திற்கு வந்திருந்தார். அவரிடம் உரையாடிக் கொண்டிருக்கையில், பெரியாரின் நூற்றாண்டு விழாப் பேச்சும் வந்தது. அக்கால் தாம் பெரியாருடன் 1939-இல் இந்தி யெதிர்ப்புக் கரணியமாகச் சிறையிலிருந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளையும், அதன் பின்னர் அவர்பால் தொடர்பு கொண்டிருந்த நிகழ்ச்சிகளையும் அன்புடனும் நன்றியுடனும் தலைமை மதிப்புடனும் நினைவு கூர்ந்தார். அவர் நினைந்து போற்றும் பெரியாரைப் பற்றிய நினைவுகளில் சிலவற்றைக் கீழே தருகிறோம். அந்நிகழ்ச்சிகளில் பெரியாரின் பண்பு நலன்கள் ஒளி பெற்றுத் திகழ்வதை அன்பர்கள் கண்டு மகிழலாம். இங்கே தரப்பெறும் நிகழ்ச்சிகள் தமிழ்த்திரு. மறை திருநாவுக்கரசு அவர்கள் கூறியவாறே குறிக்கப் பெறுகின்றன என்பதை அன்பர்கள் உணர்க)

1. ஊன் உணவு தவிர்த்தது

நான் 1939-இல் பெரியார் அவர்களுடன் சென்னைச் சிறைச் சாலையிலே இருந்தேன். நான் இருந்த அறைக்கு வலப் பக்கத்து அறையிலே அவர்கள் இருந்தார்கள். இடப்பக்கத்து அறையிலே திரு. அண்ணாத்துரை இருந்தார்கள். இப்படிப்பட்ட நிலையிலே அவரோடு எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது சிறையை விட்டு நாங்கள் வெளியே வந்த பிறகு, பெரியார் என்னை ஈரோட்டுக்கு அழைத்திருந் தார். அவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். நான்கு திங்கள் அவர் வீட்டிலேயே இருந்தேன். பெரியார் சிறைச்சாலையில் இருந்த பொழுது பலமுறை அவர் ஊன் உண்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், பெரியார் வீட்டில் நான் இருந்த நான்கு திங்களிலும் அவர் ஊன் சாப்பிடாமல் இருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. அதனால் நான் ஒருநாள் அவர் வீட்டில் சமையல் செய்து வந்த சென்னி யம்மாளை அழைத்து, "ஐயா அவர்கள் ஊன் சாப்பிடுவது எனக்குத் தெரியும். சிறைச்சாலையில் அவர்கள் பலமுறை ஊன் சாப்பிட்டதை நான் பார்த்திருக்கிறேன். எனக்கு நீங்கள் சைவமாகச் சமைத்துப் போடுவது சரிதான். ஆனால் ஐயாவுக்கு நீங்கள் ஊன் சமைத்துப் போடலாமே. அதில் எனக்கு ஒன்றும் தடையில்லையே என்று சொன்னேன். உடனே அந்த அம்மாள், 'ஐயா, நீங்கள் வருகிறதுக்கு முன்னாள் இரவு ஐயா (பெரியார்) என்னைக் கூப்பிட்டு, 'மறைச்சாமி, (என்னைப் பெரியார் மறைச்சாமி என்று சொல்வது வழக்கம்) வருகிறார்; நாளைக்கு அவர் இங்கே இருப்பார், அவர் நிரம்ப சைவம்; கடுமையான சைவம். ஆகையினால், அவர் இந்த வீட்டிலிருக்கிற வரைக்கும் நீ ஊன் (மாம்சம்) சமைக்கக் கூடாது என்று எனக்கு உத்தரவு போட்டிருக்கிறார். அதனால் நான் ஊன் சமைத்து அவருக்குப் போட முடியாது' என்று சொன்னார். அதைக் கேட்டுப் பெரிதும் தான் வியந்தேன். 'எவ்வளவு உயர்ந்த பண்பாடு' என்று எண்ணி மகிழ்ந்தேன். இது போல் பெரியாரைப் பற்றிய பல செய்திகள் நினைந்து பாராட்டுதற்குரியனவாக உள்ளன.

2. கா. சு. பிள்ளைக்கு உதவியது.

அங்கு (ஈரோட்டில்) பெரியார் அவர்களோடு இருந்த பொழுது, கா. சு. பிள்ளையவர்கள் (உங்களுக்கு தெரியும் கா. சு. பிள்ளை அவர்கள் கா. சுப்பிரமணியம் (பிள்ளை) என்பது அவர் முழுப்பெயர் தமிழ் நாட்டிலே மறைமலையடிகளைப் போல, பேரும் புகழும் சிறப்பும் வாய்ந்த பேரறிஞர். அதோடு சட்டத்துறையிலே பெரும் வல்லவர். அவருக்கிணையான சட்ட அறிஞர் அக்காலத்தில் ஒருவரும் இல்லையாம். 'தாகூர் சட்ட விரிவுரையாளர்' என்ற பட்டமும், அதற்காகப்

பதினுயிரம் உருபா பரிசும் பெற்றவர். அந்தக் காலத்திலே, தென்கிழக் காசிய நாட்டிலே குற்றவியல் சட்டப் பொத்தகத்தை எழுதி, அதிலே முதல் பரிசு பெற்ற பெரியார். தமிழில் நூற்றிருபது நூற்களுக்கு மேல் எழுதியவர். பேரறிஞர், ஆனால்) அவர் கடைசிக் காலத்திலே, அஃதாவது நான் ஈரோட்டில் இருந்த பொழுது, கா. சு. பிள்ளை அவர்கள் (அவரை எம். எல். பிள்ளை யென்றும் சொல்வார்கள். ஏனென்றால், அந்தக் காலத்திலேயே எம். ஏ; எம். எல் படித்தவர் அவர். சென்னை தாகூர் சட்டக்கல்லூரியிலே பேராசிரியராக விருந்தவர்.)—அவர்கள் தம் கடைசிக் காலத்திலே ஆதரிப்பாரின்றி, நோயுற்றுத் திருநெல்வேலியிலே, வாடி, வதங்கிக் கிடந்தார். பெரியார் ஐயா அவர்களுடன் ஒருநாள் நான் பேசிக் கொண்டிருந்த பொழுது, கா. சு. பிள்ளை அவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது 'சாமி, மறைச்சாமி, நம் கா. சு. பிள்ளை ஐயா அவர்கள் இவ்வளவு நோயுற்று தளர்ந்து கிடக்கிறாராம். என்ன கொடுமை! இவ்வளவு பெரிய தமிழறிஞரை நம் தமிழர்கள் இப்படி மறந்து விட்டார்களே! ஐயா' என்று மிகவும் வருத்தப்பட்டுக் கண் கலங்கச் சொல்லி,| அவர்களுக்கு நான் இன்று ஓர் ஐம்பது உருபா அனுப்பியுள்ளேன்; இனிமேல் மாதந் தோறும் உருபா ஐம்பது அனுப்புவேன்" என்றும் கூறினார்.

அப்போது நான் நினைத்தேன்: கா. சு. பிள்ளைக்கு வேறொரு பெயர் 'பூசைப்பிள்ளை' என்பது. கடைசி மூச்சு நிற்கிற வரைக்கும் நாள்தோறும் சிவபூசையை மணிக்கணக்காகச் செய்தவர். ஆழ்ந்த சிவபத்தர். உயர்ந்த சிவ நெறியாளர். சிறந்த சைவர். அப்படிப்பட்ட இறை நம்பிக்கையுடையவர் (ஆத்திகர்) இடத்திலே, இறை நம்பிக்கை யற்றவர் (நாத்திகர்) என்று சொல்லப் படுகின்ற நம் பெரியார், அந்தக் கருத்து வேற்றுமையைப் பாராட்டாது, தமிழர்களில் ஒரு பெரிய அறிவாளி, இப்படி ஆதரிப்பார் அற்றுக் கிடப்பதா என்று எண்ணி, அன்புவைத்து, வருந்தி, இரங்கி, மாதந்தோறும் (நான் அங்கிருந்த நான்கு மாதமும் தவறாமல் அனுப்பியதை நேரிலேயே பார்த்தேன்.) அவர்க்கு ஐம்பது ஐம்பது உருபா அனுப்பி வந்த பெருந் தன்மையை என்னென்பது! அப்பொழுது நான் வேறொன்றையும் எண்ணி வருந்தினேன். 'எவ்வளவோ சைவ மடாதிபதிகள், எவ்வளவோ சைவச் செல்வர்களாக இருக்கிறார்களே; அவர்களுக் கெல்லாம் இந்த அன்பில்லையே, இவர் 'இறைமறுப்புக் கொள்கை யுடையவராயிருந்தும் தமிழர் என்ற ஓர் உணர்ச்சிக்காக' இப்படிப் பெருங்கொடை வழங்குகின்றாரே என்றும் எண்ணினேன். (அப்போது ஐம்பது உருபா என்றால், இப்போது எண்ணிப் பார்த்தால் அஃது ஐநூறு உருபா.)

('இனி, இன்னும் அவர் எளிமையைப் பற்றி நான் எண்ணிக் கூறும்போது, என்னுடைய பெருமையைக் கூறுவதாகவும் கருதப் பட்டு விடுமோ என்று நான் சிலவற்றைக் கூறவே கூசுகின்றேன். ஆனாலும் அவற்றிலே அப்பெருந்தலைவரின் சிறந்த பண்புகளே விளங்கித் தோன்றுவதால், என்னைப் பற்றிய இடையீட்டுக்கு அன்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டிக் கொள்கின்றேன்' என்னும் பீடிகையோடு, கீழே வரும் ஓரிரண்டு நிகழ்ச்சிகளையும் உயர் திரு. மறை. திருநாவுக்கரசர் அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்.)

3. ஏனங் கழுவியது

பெரியார் அவர்கள் சிறையிலிருந்த பொழுது வயிற்றுவலி அடிக்கடி அவர்க்கு வந்திடும். அப்பொழுதெல்லாம் மருத்துவர்கள் அவரை அக்கறையுடன் விரைந்து வந்து பார்ப்பார்கள். இதற்குக் காரணம், அவர்க்குச் சிறைச்சாலை உணவு ஒத்துவராததே என்பதை நான் உணர்ந்தேன். அதனால் பெரியார் அவர்களிடம், 'இங்கே, சிறைச்சாலைத் தலைமை அதிகாரியிடத்தில், நான், உங்களுக்காகச் சமையல் செய்து தருவதாக வேண்டிக் கொள்கிறேன். அதற்கு அவர்கள் இசைந்தால் உங்களுக்கு நான் சமையல் பண்ணிப் போடுகிறேன். எனக்கு நன்றாகச் சமையல் செய்யத் தெரியும்' என்று சொன்னேன் பெரியார் அவர்களும் இசைந்தார்கள். அதன் பின் அதிகாரிகளிடமும் இதுபற்றிக் கூறி இசைவு பெற்று, பெரியார்க்குச் சமையல் செய்து தயிர்க்குழம்பு செய்து, ஏதாகினும் கறி பண்ணிக் கொடுத்து வந்தேன்.

அப்பொழுது பெரியார் நடந்து கொண்ட முறை மிகவும் அன்பு கனிந்ததாக விருந்தது. அவர்கள் நாள்தோறும் உண்ணுவதற்கு முன் அவர்கள் உண்ணும் அலமியத் தட்டுடன் என்னுடைய தட்டை யும் சேர்த்துக் கழுவிக்கொண்டு வந்து மிசையின் மேல் வைப்பார்கள். (நான் அப்பொழுது சரியாக முப்பது அகவை யுடையவன். அவர் களுக்கு அப்பொழுது அறுபது அகவை யிருக்கலாம்.) அவர்களுடைய அன்பு, பண்பு, உயர்ந்த அறிவு, அளவற்ற தொண்டு இவற்றை யெல்லாம் எண்ணி அப்பொழுது அவர்களிடத்தில் நான் அளவற்ற மதிப்பு வைத்திருந்தேன். இப்பொழுதும் வைத்திருக்கின்றேன். ஒரு சைவத் தலைவரிடத்தில் வைத்திருக்கின்ற மதிப்பை விடவும் அவர் களிடம் அதிக மதிப்பு வைத்திருக்கின்றேன். காரணம் அவர்க் கிருந்த உயர்ந்த பண்பாடுதான்.

எனவே அக்கால் அவர்களிடத்தில் நான், 'ஐயா, என் தட்டை நான் கழுவிக் கொள்வேன். அதைத் தாங்கள் கழுவ வேண்டாம்'

என்று சொல்வேன்! அதற்கு அவர் 'ஏன், கழுவினால் என்னவாம்? இதில் என்ன உயர்வு, தாழ்வு' என்று சொல்வார்கள். அப்பொழுது நான் அவர்களிடம் சொல்வேன், 'நான், ஐயாவின் மகன் போல் இருக்கின்றேன். என்றால் இதைச் செய்ய முடியும். எனவே, நீங்கள் இதைச் செய்ய வேண்டாம்' என்று இது போல் எத்தனையோ நாள் எத்தனையோ முறை நான் கேட்டுக் கொண்டும், அது பயனில்லாமல் போயிற்று. கட்டாயம் அவர்கள்தாம் இரு தட்டுகளையும் நாள் தோறும், இரண்டு வேலைகளும் கழுவி வைத்துக் கொண்டு வந்து வைப்பார்கள். அதை நான் நினைக்கும் பொழுது, அவருடைய அன்பையும் பெருமையையும் எண்ணி வியக்கின்றேன்.

4. கால் உகிர்களைக் களைந்துவிட்டது.

அதன் பிறகு, ஒருநாள், எங்கள் அறைக்கு முன்னால் ஒரு பாயைக் கொண்டு வந்து விரித்தோம். அதில் நானும் பெரியாரும் அமர்ந்தோம். (இப்படி அமர்வது அடிக்கடி வழக்கம். அப்படி அமர்ந்து கொண்டு பல செய்திகளைப் பற்றியும் ஆராய்வது உண்டு.) அவர்கள் பேசும் பொழுது நான் அமைதியாய்க் கேட்டுக் கொண்டு இருப்பேன். அது போலவே, நான் பேசும் போதும் அவர்கள் அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இது போல் பலவாறு கருத்து வேற்றுமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். அப்படி நான் பேசுகிற பொழுது, சில நல்ல இடங்களில் என்னைப் பாராட்டு வார்கள்; ஊக்கப் படுத்துவார்கள். நான் அவர்களிடத்தில் அளவிறந்த பத்திமை வைத்திருந்தேன். அவ்வாறிருந்த பொழுது தான், ஒருநாள், ஒரு முறை என் கால் உகிர் (நகங்)களில் 'சில்' லென்று ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அஃது என்னவென்று பார்த்த பொழுது, ஐயா அவர்கள் ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து, என் கால் உகிர்களில் தண்ணீரைத் தடவினார்கள். சட்டென்று நான் அஞ்சிக் கூச்சத்துடன் காலைப் பின்வாங்கிக் கொண்டு, 'என்னையா, இது ....!' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் 'ஏன்? என்னவாம், உங்கள் காலிலே 'நகம்' வளர்ந்திருக்கு. நீங்கள் அப்புறம் இப்புறம் நடந்துபோகிற பொழுது. கால் 'நகம்' பெயர்ந்து கொள்ளும், அப்புறம் நானல்ல' பட்டினி கிடக்க வேணும், என்று நகைச்சுவை ததும்பச் சொன்னார்கள். நான் உடனே, 'ஐயா, அப்படி ஒன்றும் நேராது. மேலும், இந்தக் கால் உகிர்களை எடுத்துக் கொள்ள எனக்குத் தெரியும். இத்தனை நாட்களும் நானே தான் செய்து கொள்வது வழக்கம். வேறு யாரிடமும் நான் களைந்து கொள்வ

தில்லை எனவே நானே களைந்து கொள்கின்றேன்; தாங்கள் அதைச் செய்யக் கூடாது' என்று கூறி விடாப்பிடியாக மறுத்தேன். அவர்களும் விடாப்பிடியாக, என் இரண்டு கால் உகிர்களையும் மிக அன்போடு மழிதசுடு (Blade) கொண்டு களைந்து விட்டார்கள். இதில் எனக்கு என்று எந்தப் பெருமையும் இருப்பதாகக் கருதிவிடக் கூடாது. அந்தப் பெருமை முற்றிலும் அவர்களுடையதே ஆகும். அவர்களை விட எல்லா வகையிலும் தாழ்ந்தவனாகிய என்னிடம், அப்படிப் பட்ட பெரிய தலைவர் மிகப்பெருமை யுற்றவர், அன்பின் காரணமாக, இப்படி நடந்து கொண்டது அவர்களுடைய சிறந்த பண்பட்ட தன்மையையே காட்டுவதாகும்.

5. வழிபாடு செய்ய வீட்டில் இடங்கொடுத்தது.

ஈரோட்டில், நான், பெரியார் அவர்கள் வீட்டில் நான்கு திங்கள் இருந்ததை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். அப்படி நான் அவர்கள் வீட்டில் தங்கியிருந்ததற்குக் காரணமும் உண்டு. அக்கால் நடந்த இந்தி யெதிர்ப்பு இயக்கத்திற்கு என்னை மாநிலப் பொதுச் செயலாளராக ஐயா அவர்கள் அமர்த்தினார்கள். என்னுடைய புகைப் படத்துடன் அப்பொழுதைய குடியரசு இதழிலோ விடுதலையிலோ என்னைப் பற்றிப் பலவாறு புகழ்ந்து இப்படி இவர் மறைமலையடிகளாரின் மகனார். இவரை இந்த இந்தி யெதிர்ப்பு இயக்கத்திற்கு மாநிலப் பொதுச் செயலாளராக அமர்த்தியிருக்கின்றேன், என்றெல்லாம் விளம்பரப் படுத்தியிருக்கிறார்கள். மேலும் என்னிடத்தில் அவர்க்கு அளவு கடந்த ஈடுபாடும் அன்பும் உண்டு. அப்படிப்பட்ட பெரியார் இறைமறுப்புக் கொள்கையில் நிரம்ப அழுத்தமானவர்கள். அவர் கொள்கையை நான் மதிக்கின்றேன். அவர் கொள்கை அறியாமையால் ஏற்பட்டதன்று. அறிவு முழுமையாகவே அக் கொள்கையை அவர் ஏற்றுள்ளார். ஆனால் அதேபோல் அறிவு முழுமையாகவே இறைவன் உண்டு என்று நினைக்கின்ற என்னைப் போல்வாரும் இருக்கிறார்கள். ஆனால் இரு சாரார் கொள்கைகளும் பற்றி நான் எதுவும் இங்குக் கூற விரும்பவில்லை. அது தனிப்பட்ட செய்தி. ஆனால் பெரியார் அவர்களுடைய கொள்கையை அவர் மதிப்பது போலவே, பிறர் தங்களுடைய கொள்கைகளை மதிப்பதையும் அவர் எதிர்ப்பதில்லை. அதைக் குறை கூறுவதும் இல்லை. ஆனால், அஃது உண்மையாக இருக்க வேண்டும். போலியாக மட்டும் இருக்கக்கூடாது.

அவர்கள் வீட்டிலே, நான் போவதற்கு முன்னாலேயே, அவர்கள் குடும்பத்திலே, அவர் இறைமறுப்புக் கொள்கை யுடையவாராகிவிட்ட காரணத்தால், அங்குள்ள பூசை அறையைப் பூட்டி வைத்திருந் தார்கள். ஆனால் நான் போன அன்று, அந்தப் பூசை அறைக் கதவு திறக்கப் பெற்றிருந்தது. அது மட்டுமின்றி அறை முழுவதும் கழுவித் தூய்மை செய்து, சுராலைக்குச்சி (ஊதுவத்தி) கற்றையாகப் புகைய வைத்து, விளக்கும் ஏற்றி வைக்கப் பெற்றிருந்தது. அத்துடன் ஒரு தட்டில் மலர்கள், கற்பூரம், சுராலை (சாம்பிராணி) எல்லாம் வைக்கப் பெற்றிருந்தன. இது பற்றி, 'என்ன' என்று அங்கிருந்தவர்களிடம் விளக்கம் கேட்டேன். அதற்கவர்கள், நீங்கள் இங்கிருக்கும் வரை, உங்கள் வழக்கப்படியே பூசை முதலியவற்றை யெல்லாம் செய்து கொள்ளுங்கள்; இங்கு இருப்பதனால் உங்கள் பூசை பழக்க வழக்கங்களுக்குக் கெல்லாம் முட்டுப்பாடு கூடாது' என்று சொன்னார்கள். நான் மிகவும் வியப்புக் கொண்டேன்; மகிழ்ச்சியும் அடைந்தேன். நான் நாள்தோறும் பூசை செய்து, நெற்றியில் நீறிட்டுக் கொள்வேன். கழுத்தில் உருத்திராக்க மணிகளும் அணிந்து கொண்டிருப்பேன். அப்பொழுதெல்லாம் பெரியார் அவர்கள் என்னிடம் நகைச்சுவையாக, 'சாமி' நீங்கள் இப்படி இருக்கும் பொழுது நன்றாயிருக்கிறது. நீங்கள் இப்படியே என்னுடன் இருங்கள். என்னை எல்லாரும் 'நாத்திகர்' 'நாத்திகர்' என்கிறார்கள் நான் உங்களைக் காட்டிக் காட்டி என்னையும் 'ஆத்திகர்' என்று கூறிக் கொள்வேன்' என்பார். இஃது எதைக் காட்டுகிறது என்றால் கருத்து வேற்றுமை, கொள்கை என்பதெல்லாம் எப்படியிருந்தாலும், மாந்தனுக்கு மாந்தன் மதிக்க வேண்டும்; ஒருவன் கருத்தை மற்றவன் மதிக்க வேண்டும்' என்ற உயர்ந்த பண்பாட்டையே காட்டுகிறது. இது தொடர்பாக இன்னொரு செய்தி நினைவுக்கு வருகிறது. (தொடரும்)

தென்மொழி அன்பர்கள் கவனிக்க.

தென்மொழித் தொடர்பான இயக்க நடைமுறைகள், சொற் பாடுகள், இவற்றை முறைப்படுத்தவும், கட்டிக்காக்கவும், சட்டத் தொடர்பான வழக்கறிஞர் குழு ஒன்றையும் பொதுநலப் பணிகளில் ஈடுபட மருத்துவர் குழு ஒன்றையும், அமைக்க இருக்கின்றோம். இவற்றுள் உறுப்பினர்களாகித் தங்கட்கு வாய்ப்பான நேரங்களில் பணியாற்றவும் கருத்துரைகள் வழங்கவும் விரும்புகின்ற தென்மொழி அன்பர்களாகிய வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் தங்கள் விருப்பங்களுடன் முகவரிகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிப் பதிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். —கோவன், செயலர், தென்மொழி இயக்கம், மே. பா. தென்மொழி, சென்னை-5.

10) தொண்டாமுத்தூர்—பழைய மாணவர் கழகம் 16-ஆம் ஆண்டுவிழா: வைப்புப்பொருள் வழங்குவிழா:

கடந்த 11-9-78 இரவு 8½ மணியளவில், தொண்டாமுத்தூர் மேனிலைப்பள்ளி பழைய மாணவர் கழகச் சார்பில், 16-ஆம் ஆண்டு விழாவும், வைப்புப் பொருள் வழங்கு விழாவும் கொண்டாடப் பெற்றன. விழாவிற்குத் திரு கெ. அர. காரே கவுடர் தலைமை தாங்கினர்! இசை ஆசிரியர் திரு. சுந்தரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். வழக்குரைஞர், திரு. தே. சி. அருணாசலம் க.இ; ச இ. அவர்கள் வரவேற்புரையாற்றினர். தொ. ப. ஆறுமுகம் க.மு; ச.இ ஆண்டறிக்கை படித்தார். திரு. தா. தி. சு. மணி வைப்புப்பொருள் வழங்கினர். திருவாளர்கள் தலைமையாசிரியர் இராமராவ் க.இ; இ.ப. புலவர். ந. இரா. தமிழவேள் இரா. மாணிக்கவாசகம், செ. ந. மாணிக்கம் க.இ; இ.ப., வீராசாமி (தலைவர் மனமகிழ் மன்றம், தெனமநல்லூர்) பாவலர். ஈவப்பனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார். 'தமிழ்க் குமுகாய மறுமலர்ச்சி' என்பது பற்றி நீண்ட நெடிய உணர்வுச் சிறப்புரையாற்றினர். அவ்வட்டாரத்தில் இவ்வுரை நல்ல அறிவுத் தெளிவை ஊட்டியது. புலவர். த. அ. மூங்கூரன் நன்றியுரைக்குப்பின் இரவு 2 மணியளவில் கூட்டம் இனிது முடிந்தது.

11) திருப்பூர்—பிசப் உயர்நிலைப் பள்ளி—இலக்கிய மன்ற விழா:

திருப்பூர், பிசப் உயர்நிலைப் பள்ளியில், கடந்த 12-9-78 அன்று காலை 11 மணியளவில் இலக்கிய மன்றத் தொடக்க விழா பள்ளித் தலைமையாசிரியர் தலைமையில் நடந்தது. அக்கால் பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'குறள்நெறி' என்னும் தலைப்பில் அரியதொரு கருத்துரை யாற்றினர். மாணவர்கள் என்றுமில்லா உணர்வுப் பெருக்கோடு அமைதியாயிருந்து கேட்டதைப் பள்ளி ஆசிரியர்கள் வியந்து போற்றினர்.

12) திருப்பூர்-நஞ்சப்பா மேல்நிலைப் பள்ளி: இலக்கிய மன்ற விழா:

கடந்த 12-9-78 அன்று மாலை 4 மணியளவில் திருப்பூர் நஞ்சப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளி, இலக்கிய மன்றத் தொடக்க விழா திருப்பூர் நகராட்சி ஆணையர் திரு. அ. அரங்கசாமி- க.இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு. கு. கோவிந்தராசலு அவர்கள் மாணவர்களுக்குப் பரிசு வழங்கல் முடிந்தபின், பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்னும் பொருள் பற்றிச்

சிறப்புச் சொற்பொழிவாற்றினர். அண்டை அயல் பள்ளிகளிலிருந்து ஏராளமான ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் மற்றும் பொது மக்களும் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. அனைவரிடமும் இச் சொற்பொழிவு நல்ல தமிழுணர்வைத் தூண்டியது.

13. கோபிபாளையம்—முன்னாள் மாணவர் மன்றம்:

கோவை, கோபி வட்டம், கோபி பாளையம், தூய திரேசாள் முதனிலைப் பள்ளியில், கடந்த 13-9-78 அறிவன் இரவு 8 மணியளவில் இளவல். வெ. மோகனசுந்தரம் நினைவு நாள் விழா, அளுக்குளி ஊராட்சி மன்றத்தலைவர் திரு. கோ. மு. வெங்கடேசுவரன் தலைமையில் நடைபெற்றது. திரு. கோ, அ. முத்துச்சாமி (மன்றத்தலைவர்) வரவேற்புரையாற்றினர். மன்றச் செயல் முறைகளை விளக்கி, திரு. கோ. இ. பழநிச்சாமி பேசினர். மறைந்த இளவல் மோகன சுந்தரத்தைத் திருவாளர்கள் கோ, ச. மயில்சாமி (பொருளாளர்), க. இலக்குமணன் (செயற்குழு உறுப்பினர்) நினைவு கூர்ந்தார்கள். அடுத்து, திரு. அ. செல்வநாயகம் திரு கோ. இரா காளியண்ணன், திரு. சு. செ. செல்லத்துரை, கோபி கலைக்கல்லூரிப் பேரா. ச. அரங்கசாமி. க.மு. ஆகியோர் மன்றத்தின் பலவகையான நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். திருவாளர்கள் கனகராசு, வில்லவன் க.மு., பாவலர் குமர. நடவரச ஈவப்பனர், ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் 'தமிழரும் தன்னுணர்வும்' என்னும் தலைப்பில் அரியதோர் உரையாற்றி அனைவரையும் அறிவுணர்வில் ஆழ்த்தி வியப்படையச் செய்தார்கள். இறுதியில் பள்ளித் தலைமையாசிரியரும், நெருநாளைய தென்மொழித் தொண்டரும், விழா அமைப்பாளருமாகிய திரு. மா. அரசு நன்றி கூறினர். அனைவர்க்கும் இரவு விருந்தளிக்கப் பெற்றது. இரவு 2 மணிக்கு நிகழ்ச்சி இனிது முடிவுற்றது. தொடக்கத்தில் காசி பாளையம் அரசுயர்பள்ளி ஆசிரியர் திரு. கோ. அ. நாகவேலு அவர்கள் பாவலரேறு அவர்களுக்கு வாழ்த்துப்பா படித்தளித்தார். (சில பாடல்கள் அடுத்த இதழில் வரும்.)

14. ப. சந்திரசேகரன்—தமிழரசி வாழ்க!

கடந்த 14-9-78 வியாழன் காலை 11-மணியளவில் திருச்சி, சாலைப்பாதை, மருத்துவ உறவாண்மைக் கழகம் (Medical Association) கட்டிடத்தில், கீரனூர், வணிகர் திரு. பழனியாண்டி அவர்களின் மகன் செல்வன் ப. சந்திரசேகரன். க.மு. அவர்களுக்கும், திருச்சி வைர வாணிகரும், தென்னிந்திய செயற்கை வைர வாணிகர்கள் கழகச் செயலாளரும் ஆகிய் கே. ஆர். தங்கவேல் அவர்களின் திருவளர்செல்வி தமிழரசிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்களின் தலைமையில் தமிழ்த்திருமணம் நடைபெற்றது. அது பொழுது மணமக்களை வாழ்த்தி ஆங்கிலப் பேராசிரியரும், திருச்சி, குமரி தனிப்பயிற்சிக் கல்லூரி முதல்வரும் ஆகிய எம். எசு. நாடார், க.மு. அவர்களும்; தென்னிந்திய செயற்கை வைரவாணிகர் கழகத் துணைத்தலைவர் திரு. கோ. அர்ச்சுணன் அவர்களும், தமிழ்நாடு

திருக்குறள் பேரவைப் பொதுச் செயலாளர் திருக்குறள் நா. சண்முகம் அவர்களும், திரு. சா. பெரியசாமி, பாவலர் திரு. குமர. நடவரச ஈவப்பனுர் ஆகியோரும் மணமக்களை வாழ்த்தி நல்லுரை யாற்றினர். பகலில் இனிய சிறந்த மணவிழா விருந்து நடந்தது. இரவு, பாவலரேறு அவர்களுக்கு வைர வாணிகர் திரு. கே. ஆர். தங்கவேல் அவர்கள் தம் இல்லத்தில் இனிய விருந்தளித்து, அன்பர்கள் திரு. நா. சண்முகம், திருச்சி. உ.த.க. செயலர், திரு. தி. நா. நாக வரசன் அவர்களுடன் பேருந்து நிலையம் வரை வந்திருந்து அன்புடன் வழியனுப்பி வைத்தது குறிப்பிடத்தக்கது.

பிற செய்திகள்:

1. பேராசிரியை திருவாட்டி. தாயம்மாள் அறவாணன். பண்டாரகர் பட்டம் பெற்ருர்!

ஓய்வு பெற்ற தலைமையாசிரியரும், தமிழாசிரியரும் ஆகிய, புலவர் இ. பகவதிப்பெருமாள் அவர்களின் திருமகளும், இக்கால் ஆப்பிரிக்கா, செனகால் நாட்டுத் தக்கார் பல்கலைக் கழகத்தில் 'திராவிட—ஆப்பிரிக்கப் பண்டைத் தொடர்பு, பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்து வருபவரும், தம் மாணாக்கப் பருவத்திலிருந்தே தென்மொழி அன்பருமாகிய பர். அறவாணர் அவர்களின் துணைவியாரும், அவர் ஆராய்ச்சிக்குப் பல்வகையானும் உறுதுணையாக உள்ளவரும், சென்னைப் பச்சையப்பன் மகளிர் கல்லூரிப் பேராசிரியையும் ஆகிய திருவாட்டி, தாயம்மாள் அறவாணன். க.மு. அவர்கள், அண்மையில் 'தமிழிலக்கியங்களில் குழந்தை' (The Child in Tamil Literature-A Study) என்னும் தலைப்பில் ஆய்வேடு வழங்கிப் பண்டாரகர் பட்டம் பெற்றுள்ளார். அதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு: 101-ஐ நன்கொடையாக அளித்துள்ளார். அம்மையார் அவர்கள் தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் மேன்மேலும் அரிய தொண்டாற்றிப் பெயரும் புகழும் பெற்றிலங்கத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

2. தமிழமல்லனின் 'தனித்தமிழ்' நூல் வெளியீட்டு விழா:

கடந்த, கடகம் 21, (6-8-78) ஞாயிறு புதுவையில், தனித்தமிழ்க் கழகச் செயலாளர் க. தமிழமல்லன் எழுதிய 'தனித்தமிழ்' நூல் வெளியீட்டு விழா பேரா, அ. பசுபதி. க.மு. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திரு. தமிழ்மாறன் வரவேற்புரையாற்ற, அறிஞர். திரு. தி. நா. அறிவுஒளி. க மு. அவர்கள் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்தினர். திரு. விநாயகம் நூலைப் பெற்றுக் கொண்டார். திருவாளர்கள், புலவர் வே. முத்துக்குமரசாமி, பேரா. அய்யாச்சாமி நூல் மதிப்புரை வழங்கினர். திருவாளர்கள். புலவர். அரிமதி தென்னகன், மன்னர் மன்னன், புலவர். திருமுருகன் க.மு, தமிழ நேயன், மு. வேந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூலாசிரியர் நன்றியுரைக்குப்பின் திரு. திருமாவளவன் விழா நன்றியுரை கூறினர்.

3. தனித்தமிழ் இயக்கம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்:

கடந்த 1-9-78 அன்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் 'தனித்தமிழ் இயக்கச்' செயற்குழுக் கூட்டம் முன்னவர் அரசேந்திரன் க.மு. தலைமையில் நடைபெற்றது. அக்கால் நடப்பாண்டிற்குக் கீழ்வருமாறு புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அமைப்பாளர் செ. திருத்தொகையன். இணையமைப்பாளர்கள்: இ. செந்தாமரை, நா. எழிலி (சுந்தரி); செயலர்: வை. அறிவுக்கரசன்; இணைச் செயலர்கள்: அ. மகிழ்நன், வெ. அழகி (லலிதா), பொருளர். பா. சீத்தாராமன். இணைப்பொருளர்: க. இளங்கோவன். பின்னர்ப் புதிய செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.—இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து, சென்ற 28-9-78 வியாழன் மாலை 4-30 மணியளவில், அ.ப. க.க. பட்டமளிப்பு விழா மன்றத்தில், தனித்தமிழ் இயக்கத்தின், இரண்டாம் ஆண்டுத் தொடக்கப் பெருவிழா நடைபெற்றது. விழாவிற்குத் துணைவேந்தர், உயர்திரு. வ. சொ. சோமசுந்தரனார் அவர்கள் தலைமை தாங்கி, அரியதொரு தொடக்கப் பேருரை நிகழ்த்தினார். அவர் தம் பேருரையில், தமிழின் இனிமையினையும், தமிழ்மொழி காக்கப்பட வேண்டிய முறைகளையும், அறிவு முழுமையானமேற் கோள்களுடன் எடுத்துக் காட்டித் தனித்தமிழ் இயக்கம் செழிப்புறுதற்குத் தம்மால் இயன்ற துணையையும் ஆக்கங்களையும் தருவதாக உறுதியளித்தார்கள். அடுத்து அ.ப. க.க. தமிழ்த்துறைத் தலைவர் பேரா. திருமுறைச்செல்வர், திருமிகு. க. வெள்ளைவாரணனார் பாராட்டுரை வழங்கினார் அவர் தம் அருந்தமிழ் உரையில், தனித்தமிழ் இயக்கம் தொடங்கப் பெற்றதற்கான காரணியங்களையும், செயற்பாட்டுத் திட்டங்களையும் வரையறுத்துப் பேசினார். மேலும், பல்கலைக் கழக இயக்கத்தினைச் செம்மையுற நடாத்திச் செல்கின்ற தமிழுணர்வு மிக்க நற்றமிழ் இளைஞர்களின் எழுச்சிமிகு உணர்வுகளை மிகுதியாய்ப் பாராட்டி மகிழ்ந்தார். தொடக்கத்தில் இயக்கச் செயலர் திரு வை. அறிவுக்கரசன் வரவேற்புரையும், இறுதியில், இயக்கத்துணைச் செயலர் திரு. மகிழ்நன் நன்றியுரையும் நவின்றார்கள். விழா இனிதே நிறைவுற நடந்தது.

4. சொ. துரைசாமி, க.இ. — ச. சிவகாமி, அறி. இ. வாழ்க!

கடந்த 4-9-78 திங்கள் காலை 6 மணியளவில், பவானி வட்டம் கா. புதூரில், திரு. பி. எசு. சொக்கலிங்கம் அவர்களின் மகன் செல்வன் சொ. துரைசாமி க.இ, அவர்களுக்கும், திரு. எசு. பி. சண்முகம் அவர்களின் மகள் செல்வி. ச. சிவகாமி அறி.இ. அவர்களுக்கும் புலவர். திரு. வா. பழனிசாமி அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. அது போழ்து புலவர். திரு. இ. முத்துச்சாமி, பாவலர் திரு. குமர நடவரச ஈவப்பனார் முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமண நினைவாகத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களுக்கு ஓராண்டுக் கட்டணங்களும், தென்மொழிக்கு அன்பளிப்பாக உரு. ஐந்தும் விடுக்கப்பெற்றன. மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

5. பழனி வட்டம், தேவத்தூர், மணிமேகலை இளங்கோ உயர்நிலைப் பள்ளி-இலக்கிய மன்றத் தொடக்க விழா:

கடந்த 21-9-78, பழனி வட்டம், தேவத்தூர், மணிமேகலை இளங்கோ உயர்நிலைப்பள்ளி, இலக்கிய மன்றத் தொடக்க விழாவுடன் பெரியார், அண்ணா பிறந்த நாள் விழாக்களும் கொண்டாடப் பெற்றன. விழாவிற்குப் பள்ளித்தாளாளர் தமிழ்த்திரு. நா. நாச்சிமுத்து (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் வே. மருது. க.மு; ப.இ. வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட கோவை. அறிஞர். திரு. கு. வெ. கி. ஆசான். க.மு; ச.இ. அவர்கள் 'வளரும் குமுகாயத்தின் தொடரும் வரலாறு' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அவர்தம் உரையில் 'பெரியார் எவ்வாறு, பிறநாட்டுச் சீர்திருத்தக்காரர்கள் நான்கைந்து நூற்றாண்டுகளில் விளைவித்த செயற்பாடுகளை, ஒரு சில தலைமுறைகளில் செய்து காட்டினார்' என்பதை மாணவர் மனங்களில் பதியும்படி எடுத்துரைத்தார். தாளாளர் அவர்கள் தம் உரையில் தமிழினத்திற்குக் கேடு விளைவிக்கும் நூற்களை நாம் தொடக் கூடாதென்றும், இனத்திற்கு நலஞ்சேர்க்கின்ற பெரியார், அண்ணா, பாவேந்தர், பாவலரேறு ஆகியோர்தம் படைப்புகளை மட்டுமே பயிலவேண்டும் என்றும், இதைப் பெரியார் நூற்றாண்டு விழா உறுதி மொழியாகக் கொள்ள வேண்டும் என்றும் மாணவர்களையும் மற்றவர்களையும் கேட்டுக் கொண்டார். அறிவியல் ஆசிரியர் திரு. அ. காந்தி அவர்கள் அண்ணா பெரியார் ஆகியோரைப் பற்றிய கருத்துச் செறிவுள்ள பாடலொன்றைப் பாடினார். தமிழ் ஆசிரியர் திரு. வ. துரைசாமி அவர்களின் நன்றியுரைக்குப் பின் விழா இனிது முடிவுற்றது, என்னும் செய்தியைப் பள்ளி ஆசிரியர் திரு. வேலிறையன் க.இ. அவர்கள் தெரிவிக்கின்றார்,

6. புதுவை வானொலி தமிழைப் பழித்ததற்குக் கண்டனம்

கடந்த 9-10-78 அன்று கூடிய, புதுவைத் தனித்தமிழ்க் கழகத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம், புதுச்சேரி வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பெற்ற இந்திப் பாடத்தில், தமிழ்மொழி பழித்துரைக்கப் பட்டதற்கு எதிராகக் கீழ்க்காணும் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி நிலைய இயக்குநர்க்கு விடுத்துள்ள செய்தியைக் கழகச் செயலர் திரு. க. தமிழமல்லன் தெரிவிக்கிறார்.

சென்ற 28-8-78 அன்று புதுவை வானொலி நிலையம் ஒலிபரப்பிய இந்திப் பாடத்தில், 'தமிழ்மொழி இனிமையானது இல்லை' என்ற சொற்றொடரைக்கூறி, தமிழை இகழ்ந்த செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வானொலி மூலம் தமிழை இகழ்ந்தவர் மீது, தக்க நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என்றும், வானொலி வழி வெளிப் படையாக, அவர் மன்னிப்பைக் கோரவேண்டும் என்றும் தனித்தமிழ்க் கழகம் கேட்டுக் கொள்கிறது. அதுவுமன்றித் தமிழ்நிலத்தில் தமிழ் இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்கென உள்ள வானொலி நிலையத்தின் மூலம், இந்திப்பாடம் நடத்தப்படுவது இந்தித் திணிப்பின் ஒருவகை

யென்றே கருதுகின்றேம். தமிழுக்குரிய நேரம் இந்திக்கெனச் செல விடப்பெறுவது தமிழர்க்கு ஓர் இழப்பாகும். எனவே வானொலி, இந்திப்பாடம் நடத்துவதை உடனே நிறுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேம்.'

7. வெங்காலூர் தமிழ்ச்சங்கம் எடுக்கும் திருவள்ளுவர் விழா:

வெங்காலூர் (பெங்களூர்) தமிழ்ச்சங்கம், திருவள்ளுவரின் 2009-ஆம் ஆண்டு விழாவை, வரும் பொங்கல் திருநாளை ஒட்டியும், சங்க 29-ஆம் ஆண்டு விழாவை ஒட்டியும் பத்து நாள்கள் சிறப்புடன் கொண்டாட முடிவு செய்துள்ளது. விழாத் தொடக்க நாளில் வள்ளுவரின் திருவுருவப் படமும் திருக்குறளும் யானை மேல் வைக்கப் பெற்று, 1330 மாணக்க மாணக்கியர் திருக்குறளை ஓதியபடி முன் செல்ல, இயவங்கள் இசைக்கச் சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரை யாட்டங்களுடன் ஊர்வலம் நடைபெறும். திருக்குறள் நூற்பொருட் காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பெறும். அதில் திருக்குறள் மூல நூற்கள், உரைகள், மொழிபெயர்ப்பு நூற்கள், கதை, கட்டுரை, விளக்கநூற்கள், ஆராய்ச்சி நூல்களுடன் அவற்றின் நூலாசிரியர்கள் பதிப்பாசிரியர்கள் திருவுருவப் படங்களும், குறள் விளக்க ஓவியங் களும் இடம்பெறும். இப்பொருட்காட்சிக்கு நூல்கள் வழங்கவும், படங்கள் வரைந்துதவவும் அன்பர்கள் கேட்டுக் கொள்ளப் பெறு கின்றனர். சிறந்த ஓவியங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெறும். திருக்குறள் ஆய்வு அடிப்படையில் கருத்தரங்கம், பட்டி மன்றம், பாட்டரங்கமும் நடைபெறும். மற்றும் குறளிசை நிகழ்ச்சி, வில்லுப் பாட்டு, குறள் கருத்து நாடகங்களும் நடைபெறும். சங்கக்கூட்ட எதிரில் அமைக்கவிருக்கும் திருவள்ளுவர் சிலைக்குக் கால்கோள் நிகழ்ச்சியும் நடக்கும். விழாவில் தமிழகம், கருநாடகம், நடுவணரசு அமைச்சர்களும், தமிழ், கன்னடப் பேரறிஞர்களும் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள் என்றும், விழா சிறப்பாக அமைய அனைத்து ஏற்பாடு களும் செய்யப்பெற்று வருகின்றன என்றும் சங்கத் தலைவர் திரு. தண். கி. வேங்கடாசலம் அவர்களும், செயலாளர் திரு. நா. நீல கண்டன் அவர்களும் அறிவிக்கிறார்கள். திருவள்ளுவர் விழா, தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கும் தூயதமிழ் விழாவாக அமையுமாறு, தென்மொழி அப்பொறுப்பாளர்களைக் கேட்டுக் கொள்வதுடன், விழா இனிது நிறைவேறவும் நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

அன்பர்கள் கவனிக்க.

பொறி பழுதுற்றதாலும், அச்சக அமைப்பில் சில திருத்தங்கள் மேற்கொண்டதாலும் இவ்விதழ் தாழ்ந்து வருகின்றது. அன்பர்கள் பொறுத்துக் கொள்க.

—அமைச்சர்.

100க்கு இரண்டு பேரே அறியும் ஆங்கிலத்தை மக்களாட்சி நாட்டில் எப்படி நிலையான ஆட்சி மொழியாக்குவது? ஆங்கிலத்தை 98 பேர்மேல் திணிக்க முடியுமா? 20 கோடி இந்தி மொழியினரும் வங்க, குசராத்தி, மராட்டி, கன்னட, தெலுங்கு, மலையாள மொழியினரும் தன்மானமுள்ளவரையில் இதற்கு ஒப்பாரே! வியப்பென்னவென்றால் தமிழ் உரிமைக்காக உள்ள இம் மாநாட்டிலா இவ்விழிவான அடிமை உணர்வுமிக்க தீர்மானங்கள். இவ்விழிவான தீர்மானங்களை ஏன் மாநாட்டிலுள்ளவர்கள் எதிர்க்காதும், உடன்படாதும் வாளா இருந்தனர்? —மறை. திருநாவுக்கரசு. சவகர் நகர். சென்னை-82.

0: 601: நிறைந்த உண்மைக் கருத்துகளை நாளும் கொண்டிலங்கி வெளியிடும் தமிழ் நெஞ்சினரே! வணங்குகிறேன். நாளும் உங்கள் நலம் சிறந்து விளங்க என் நெஞ்சுறை அங்கலிங்கப் பெருமானை இறைஞ்சுகிறேன். இத்திங்களிதழ் தென்மொழியில் பகுத்தறிவோடு அமையும் இறைக் கொள்கையே தமிழரின் பண்டைய இறைக் கொள்கை என்பதை மிக ஆணித்தரமாகக் கூறியுள்ளதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன். எங்கள் வீரசைவக் கருத்துகளும் இவையே தாம். இன்று ஒதுக்கப் பட்டும், மிகப் புரட்சியின் பாற்பட்டதுமான 'வீரசைவம்'' காணும் உண்மைக் கோட்பாடுகளை ஒப்பு நோக்கிப் பார்க்கின் தாங்கள் கூறும் தமிழர் நெறிகள் தாம் வீரசைவ நெறிகள் என என் மனதிற்படுகிறது. வீர சைவத்திற்குத் தொடக்கத்தில் சமய நோக்கு இல்லை. இயக்க நோக்குத்தான் இருந்தது. பின் எழுந்த மூட நோக்கினர் அதைச் சமயமாக்கி விட்டனர். தமிழனின் சிறப்பான இறைக் கொள்கையை இழத்தல் கூடாது என்ற பேருண்மையைத் திராவிடக் கழகத்தினர்க்குத் துணிச்சலுடன் கூறிய தங்கள் பேராண்மையைச் சான்றாண்மை ஆகக் காண்கிறேன். ஆயினும் தாங்கள் படைத் தலைவனாக மட்டுமே இருந்து செயற்பட வேண்டும் என்று விளங்குவதை விட, நான் எதிர்பார்ப்பது திராவிடக் குமுகாயத் தலைவனாக வேண்டு மென்பதே. என்று தீரும் எங்கள் ஆவல்? —வேலா. இராசமாணிக்கம்.— ஈரோடு.

0:602: பேரன்பின் ஐயா, நெஞ்சார்ந்த வணக்கம். குறுகிய காலத்தில் அழைப்பு விடுத்தும், இசைவு தந்து எங்கள் மன்றம் ஏற்றமுறவும் தமிழ் உள்ளங்களெல்லாம் உணர்வு பெறவும் அரியதொரு தீந்தமிழிலக்கியப் பேருரை ஆற்றியது எங்கள் நினைவினின்று என்றும் அகலாத தொன்றாகும். கூட்டம் சிறிதெனினும் குவிந்திருந்தோர் அனைவரும் தாங்களூட்டிய தமிழ்த் தேனை மாந்தித் திளைத்தனர். தங்களது வாழ்த்தும் அன்பும் என்றென்றும் எங்களுக்குக் கிட்டும் அருமருந்தாக வேண்டி, தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில், தமிழார்வலர்களனைவரது நன்றிப் பெருக்கினையும் எனது நன்றியுணர்வோடிணைத்து இம்மடல் வாயிலாகத் தங்கள் திருமுன்னர் வைக்கின்றேன். — பால்சாமுவேல். தாராபுரம்.

0: 603: பைந்தமிழ்க் காவல, பணிவான வணக்கம்; சுவடி:15, ஓலை: 2-இல் தாங்கள் துலைநாவன்ன சமநிலை நின்று, மக்கள் நலம் நாடும் அரசியற் கட்சியாளர்க்கு அறிவுதெருட்டிக் கூறிய மாசிலா ஆசிரியவுரை யாராலும் மறுத்தற்கரிய கருத்துச் செறிவுடையது. மாற்றாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மாண்புடையது. கண்ணை விற்று, ஓவியம் பெற்றாற் போல், கண்ணொக்கும் மொழியை விட்டு, இனத்தை மட்டும் முன்னேற்ற முயலும் 'விடுதலை'யின் வியத்தகு போக்கு, அதன் தன்னல எண்ணத்தின் வெளிப்பாடோ என்னும் ஐயுறவிற் கிடனளிக்கிறது. தங்களது இந்தி எதிர்ப்பு மாநாட்டு உரையினை விடுதலையும்; முரசொலியும் வேண்டுமென்றே புறக்கணித்தது போல் தோன்றுகின்றது. வேண்டி வினைசெய்யும் அவ்விதழ்களின் உள்நோக்கம் யாதோ? ஆரியப் பார்ப்பனக் கழிவறை இதழ்கள் அவரினத்தாரின் உளறல்களை யெல்லாம் அரிய உரைகளாக வெளி

யிட்டுப் பரப்புதல் அறிந்தும், ஆரிய அடிமை மடித்துயில் நீக்கத் தொண்டாற்றுவதாக அடிக்கடி விளம்பரஞ் செய்து கொள்ளும் நம்மின இதழ்கள், தங்களை யொத்தவர்தம் தமிழ் முழக்கத்தை இருட்டடிப்புச் செய்தல், அனைத்துச் செயல்களிலும், கட்சியின் பெயரால் தாமே முன்னணியில் இருத்தல் வேண்டுமென்றே, தங்களை யொத்தவர்க்கு வாய்ப்பளித்தால், குமுகாயத்தில் உயர்ந்து புகழ் மிக்கவராகித் தம்மைக் கீழ்முகப் பெயர்ச்சி செய்து விடுவர் என்னும் மனப்புழுக்கத்தாலோ செய்த செயல் போல் தோற்றுகிறது.

—பெரு. தமிழ்வேந்தன். பவானிசாகர்.

0: 604, பேரன்புடையீர்! நல்வணக்கம். ஒரு காலத்தில் தங்கள் ஏட்டில் 'கயற்கண்ணன்' என்ற பெயரில் எழுதிய நான், ஆசிரியர் இயக்கப் பணியிலே என்னை முழுதுமாக ஈடுபடுத்திக் கொண்ட நிலையில்-மொழிப் பணியில் பின்தங்கி விட்டேன்; பெரிதும் வருந்து கிறேன்; இனி, தொடர்வேன். சட்டமன்ற மேலவையில் நான் 1-8-78 அன்று ஆற்றிய உரையின் படி ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் 6-ஆம் பக்கல் தொடங்கி 9-ஆம் பக்கல் ஈறாக; தமிழ் பற்றியும், தமிழாசிரியர்கள் நிலை பற்றியும் நான் பேசிய பேச்சுகள் இடம் பெற்றிருக்கின்றன. தமிழ் பற்றிப் பேசும் போது கூட ஆங்கிலக் கலவைதானு, எனத் தாங்கள் என்மீது சினம் கொள்ளலாம். பொறுத் தருள்க! அனைத்து நிலையினரின் குறைகளையும் தரப்பட்ட மணித்துளி களுக்குள் சுட்டிக் காட்ட வேண்டிய சூழ்நிலையில்-விரைவு நோக்கி-மொழிக் கலவை ஏற்பட்டு விட்டது. இனி, இப்பிழையைச் செய்ய மாட்டேன். இனி, தொடர்ந்து, தொடர்பு கொள்வேன். அவிநாசி, உளுந்தூர் பேட்டை, செம்பொன் நண்பர்கள் வழியே தங்கள் நலம் பற்றி அவ்வப்போது அறிந்து வருகிறேன். நன்றி!

—மீனாட்சிசுந்தரம். சட்டமன்ற மேலவை உறுப்பினர். தலைஞாயிறு.

0:605: ஐயா, இரா. மதிவாணனின் கட்டுரை இழிதிணை என்று சொல்லாமல் அஃறிணை என்பதை அவர் குறிப்பிட்ட போது, அது சிந்தனையைக் கிளறுவதாக அமைந்தது. ......மொத்தத்தில் தமிழகம் அன்று எப்படி இருந்தது என்பதைப் பற்றிப் படிக்கும் போது மெய் சிலிர்க்கிறது. இன்று மாற்றமும், மறுமலர்ச்சியும் பெருவிட்டால் வேறு என்று தான் பெறுமோ?

—வா. இரா. சண்முகம். வழக்குரைஞர், திருப்பத்தூர். வ.ஆ.

0: 606: மாண்புள்ள ஐயாவுக்கு, இனிய வணக்கங்கள். யான் தனித்தமிழ் ஏடுகளான தென்மொழி, தமிழ்சிட்டையும் திங்கள் தோறும் தவறாமல் வாங்கிப் படித்து வருகிறேன். தனித்தமிழ்ச் சுவையைச் சுவைத்தவர்கள் வேறெந்தச் சுவையையும் போற்ற மாட்டார்கள். பாரெங்கும் தனித்தமிழைப் பரப்பப் பொறுப்புள்ள கழகங்கள் இயக்கங்கள் சுறுசுறுப்புடன் பணியாற்றக் கேட்டுக் கொள்கிறேன். நம் தமிழ்த் தோழர்கள் தனித்தமிழ் ஏடுகளில் வராத ஆங்கிலம் மற்றும் மாற்று மொழிச் சொற்களின் பொருள்களைக் கேட்கிறார்கள். அதற்கு என்னால் விடை சொல்ல முடியவில்லை. மிகவும் வருத்தமாக இருக்கிறது. அதோடு இங்குள்ள அமைச்சர் களும் (தமிழர்கள்) மாற்று மொழியைக் கலந்தே பேசுகின்றனர். சில வேளைகளில் எனக்கு விடை மடல் எழுதும் போதும் அப்படியே செய்கின்றனர். ஆனால் நான் அவர்களுக்கு வரையும் போது தனித் தமிழையே பயன்படுத்துவேன். அவர்களோடு நேரடித் தொடர்பு கொள்ளும் பொழுது தனித்தமிழிலேயே உரையாட உறுதி பூண்டுள்ளேன்.

—இரா. கணேசன். சிங்கப்பூர்-24.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).